பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 16 வெள்ளிக்கிழமை 29.03.2024 கதிர் 143

### கடன் மறுசீரமைப்புத் தொடர்பில்

## பிணை முறியாளர்களுடன் லண்டனில் நடக்கிறது பேச்சு

சீனாவிலுள்ள ஹைனான் மாகாணத்தில் நடைபெறும் போவோ மாநாட்டில் பங்கேற்பதற்காக அந்நாட்டுக்குச் சென்றிருக்கும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, சர்வதேசபிணைமுறியாளர்கள் குழுவுடன் லண்டனில் நடைபெற்றுவரும் பேச்சுக்களில் சாதகமானமுடிவொன்று எட்டப்படும்எனஎதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி 'சர்வதேச நாணய நிதியத்தினால் அடுத்தகட்டகடன்நிதி விடுவிக்கப்படுவதற்கான அனுமதியைப்பெற்றுக்கொள்வது இலங்கைக்கு மிகமுக்கியமானதாகும்' எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று இவ்வாரம்சீனஜனாதிபதி சிஜின்பிங்மற்றும்பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்குஇடையில் நடைபெற்ற இருதரப்புக் கலந்துரையாடலின் போது, இலங்கைக்கும் சீனஏற்றுமதி, இறக்குமதி வங்கி (எக்ஸிம் வங்கி) மற்றும் சீன அபிவிருத்தி வங்கி ☞ 2

## தேர்தல் எது என்பதைத் தீர்மானிக்க பஸில் ஒன்றும் ஆணையாளரல்லர்

### இராஜாங்க அமைச்சர் சாமர எடுத்தெறிந்து பேச்சு

எந்தத்தேர்தலைமுதலில் நடத்த வேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கு பஸில் ராஜபக்சஒன்றும்தேர்தல்கள் ஆணையாளரல்லர், அரசமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்று கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தெரிவித்தார். இவர் பொது ஜன பெரமுன ☞ 8

## ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட நாமலுக்குக் காலமிருக்கிறது

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கருத்து

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நாமல் ராஜபக்சவுக்கு இன்னும் 5 முதல்10வருடகாலம்பிடிக்கும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானபிரசன்னரணதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று நெலும் மாவத்தையில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். ☞ 2

## இது ரகசியம் அல்ல!

அவனவன் எதை எதையோ கண்டுபிடித்தால் அதைப் பயன்படுத்துறவன் எதற்கெதற்கோவெல்லாம் அதனைப் பயன்படுத்துகின்றார் என்பதைப் போல, செயற்கை நுண்ணறிவு (ஏஐ - AI) தொழில்நுட்பத்தை நம்மாட்கள் பயன்படுத்தியிருக்கும் விதத்தைப் பார்க்கும்போதே புல்லரிக்கின்றது.

கடந்த சில நாட்களாக சமூக ஊடகங்களில் ஒரு தகவல் பரபரப்பாக வலம் வந்த தகவல், கிளிநொச்சியில் இராவணன் காலத்து பொருட்கள் சில தொல்பொருள் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன என்பதுதான். அத்தோடு நின்றிருந்தால்கூட பறவாயில்லை. அந்த இராவணன் காலத்துப் பொருட்களின் படங்களையும்கூட வெளியிட்டிருந்தார்கள்.

சில பல படங்களைப் போட்டு, 'கிளிநொச்சியில் அகழ்வாராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாம். அத்தோடு இவை இராவணனின் பயன்படுத்தியாக கருதப்படுகிறது. இவை இராவணன் பயன்படுத்திய புட்பக விமானத்தின் பாகங்களாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறதாம். இதனை ஆராய்வதற்காக ☞ 2

## நாடாளுமன்றம் ஏப். 1,2 கூடுகிறது

நாடாளுமன்றத்தை எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி மற்றும் 2ஆம் திகதிகளில் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் மார்ச் 22 நடைபெற்ற நாடாளுமன்ற அலுவர்கள் குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கு அமைய ஏப்ரல் 1 திங்கட்கிழமை, மு.ப 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன், மு.ப 9.30 மணி முதல் பி.ப 4.30 மணி வரை 2024.03.19ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆயுர்வேத சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (இது தொடர்பான பிரேரணை 2024.04.01ஆம் திகதிய 14ஆம் இலக்க நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது). இதனைத் தொடர்ந்து பி.ப 4.30 மணிக்குத் தனிநபர் சட்டமூலமான சர்வதேச தேரவாத நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் ☞ 8

### அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண

# இலங்கை ஆட்சி முறையில் மாற்றங்கள் இடம்பெறட்டும்

### கத்தோலிக்க ஆயர் பேரவை வலியுறுத்து

**இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார அரசியல் நெருக்கடிகளுக்குத்தீர்வைகாண்பதற்கு இலங்கையின் ஆட்சிமுறையில் மாற்றங்கள்இடம்பெறவேண்டும் என்று இலங்கை கத்தோலிக்க ஆயர்பேரவைதெரிவித்துள்ளது.**

**இலங்கைகத்தோலிக்கஆயர் பேரவை, உயிர்த்த ஞாயிறு தினத்திற்கானதனது செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளது.**

**நாடு கடும் அரசியல் பொருளாதார சமூக நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சூழலில்** ☞ 2

## தனிநபர் மாதாந்தச் செலவு அதிகரிப்பு

தனிநபர் ஒருவரின் மாதாந்தசெலவு அதிகரித்துள்ளதாகதொகைமதிப்பு மற்றும் புள்ளிவிமிரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம்ஜனவரி மாதத்தில் ஒருவருக்கு தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச மாதாந்தச் செலவு சராசரியாக 17,014 ரூபாவாக அதிகரித்துள்ளதாகதிணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. கடந்தஆண்டுடிசெம்பரில் இதன்மதிப்பு16,524ஆக பதிவானது.

ஒரு நபரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மாவட்ட மட்டத்தில் மாதாந்தச் செலவு கணக்கிடப்பட்டுள்ளதாகவும், கொழும்பு மாவட்டத்தில் வாழும் மக்களே அதிக செலவினங்களைச்சுமக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் தனிநபர் மாதாந்தச் செலவு 18,350 ரூபாயாகவும், கம்பஹா மாவட்டத்தில் 18,256 ரூபாயாகவும், நுவரெலியா மாவட்டத்தில் 17,892 ரூபாயாகவும் உள்ளது.

சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கையின்படி, மொனராகலை மாவட்டத்திலிருந்து மிகக் குறைந்ததனிநபர் ☞ 8

## சரியான பொருளாதாரப் பாதையில் நாடு இப்போது பயணிக்கிறதாம்

### இரு மாதங்களில் ரூ. 1000 மில். ஏற்றுமதி வருமானம்

கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் இலங்கை 983.7 மில்லியன் ரூபாய் ஏற்றுமதிவருமானத்தைப் பெற்றுள்ளதுடன், நாடு தற்போது சரியான பொருளாதாரப் பாதையில் செல்வதை, அது உறுதிப்படுத்துவதாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

பாடசாலைக் காலத்திலேயேதொழில்முயற்சி சூழலுக்குள்ஈர்த்தெடுப்பது அவர்களைஎதிர்காலத்தில் தொழில்முனைவோராக உருவாக்கவழிவகுக்கும் என்று இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர இதனைத் ☞ 2

## சிறுவர் ஆபாச காணொலிகளை உடன் நீக்கும் முறை அறிமுகம்

இணையத்தில் பதிவேற்றப்படும் சிறுவர்களின் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் ஆபாசமான காணொளிகளை உடனடியாக நீக்குவதற்கானஇணைய வழிமுறைமைஜனாதிபதி அலுவலகத்தில்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் அறிமுகப் படுத்தப்பட்டது.

சிறுவர்துஷ்பிரயோக சம்பவங்கள் அல்லது சிறுவர்கள் சிக்கிக்கொள்ளக்கூடிய இணைய பக்கங்கள், புகைப் படங்கள், காணொளிகள் உள்ளிட்டகாரணங்களால் சிறுவர்கள் பெருமளவில் சைபர் வலையப்பிற்குள் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, உலகின் முன்னணி இணைய சிறுவர் பாதுகாப்புஉறுதிப்படுத்தல் நிறுவனங்களில் ஒன்றான ஐக்கிய ராஜ்ஜியத்தின் Internet Watch Foundation – IWF உடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதோடு, Save ☞ 2

## ரம்புக்வெல உட்பட 9 பேரின் விளக்கமறியல் காலம் நீடிப்பு

போலி மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கில் முன்னாள் அமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல உள்ளிட்ட 9 பேர் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள்அமைச்சர் கெஹலிய ☞ 2

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த வாக்குமூலம்:

## நீதிமன்றில் முற்படுமாறு மைத்திரிக்கு உத்தரவு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு வழங்கிய வாக்குமூலம் குறித்து ஏப்ரல் 4 மாளிகாகந்த நீதிவான் மன்றில்முன்னிலையாக உத்தரவுபிறப்பித்துள்ளது.

முன்னாள்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவியல்விசாரணை திணைக்களத்திற்கு வழங்கிய வாக்குமூலம் தொடர்பிலான விடயங்களை ஆராய்ந்த ☞ 2

## திறைசேரி உண்டியல் நட்டம்: கப்ரால் மீது வழக்குத் தாக்கல்

### இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு நடவடிக்கை

திறைசேரிஉண்டியல் கொள்வனவின் ஊடாக இலங்கைக்கு 1,843.3 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தியமைக்காக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உள்ளடங்கலாக ஐவருக்குஎதிராக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்கவினால்அளிக்கப்பட்ட முறைப்பாடுகுறித்துமேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய தாம் இதுபற்றி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருப்பதாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறைப்பாடானது கடந்த 2012 ஆம்ஆண்டு கிரீஸ் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத் ☞ 8

## இனி இது .....

ஜப்பானிய தொல்பொருள் ஆய்வாளர்கள் வருகிறார்களாம். அவர்களோடு இலங்கை தொல்பொருள்திணைக்களத்தினரும் சிங்கள தொல்பொருள் ஆய்வாளர்களும் இணைந்து கொள்கிறார்களாம். இராவணனின் கோட்டையாக இருந்த சிகிரியா சிங்கள மரபுரிமைச் சின்னமாக மாற்றியது மட்டுமல்லாமல் இராவணன் சிங்கள மன்னன் என்று வரலாற்றை மடை மாற்றிக் கொண்டுள்ள சிங்கள பேரினவாதம் அடுத்து என்ன கதை உருவாக்க போகிறதோ?' என்ற கருத்துப் பதிவும் சமூக வலைத்தளங்களில் இடம்பெற்றிருந்தது.

இராமாயண காலம் என்பதே 5 முதல் 7 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்கிறார்கள். அவ்வளவு பழமையான ஒரு பொருளை மிகச் சாதாரணமாக ஒரு அகழ்வாய்வில் கண்டெடுத்தார்கள் என்று கதைவிட்டால் நம்புவார்கள் என்று கருதியவர்களைப் பாராட்டத்தான் வேண்டும். ஏனெனில் அதனை வாசிப்பவர்களின் மனநிலையையும் அறிவையும் அவர்கள் எடைபோட்டு வைத்திருந்த முறைக்காக அவர்களுக்கு ஒரு கைதட்டல் கொடுத்தேதான் ஆகவேண்டும். ஒரு படத்தைப் போட்டு எதைச் சொன்னாலும் தமிழர்கள் நம்புவார்கள், காவிக்கொண்டு திரிவார்கள் என்று அவர்கள் நம்பிய அந்த நம்பிக்கையைத்தான் சொல்கின்றேன்.

ஏனெனில் அந்தக் கருத்து மட்டுமல்ல அந்தப் படமுமே பசச்சைப் பொய் என்று தெரியவந்திருக்கிறது. தரவுச் சரிபார்க்கும் தளங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, முகப் புத்தகங்களிலும் எக்ஸ் பக்கங்களிலும் யூரியூப்பிலும் பகிரப்பட்ட படமும் தகவலும் எந்தவித ஆதாரங்களும் அற்றவை. மட்டுமல்ல அந்தப் படங்கள் செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட போலியான படங்கள்தானாம். கச்சிதமாக ஒரு படத்தை உருவாக்கி, அதற்கொரு விளக்கமும் வெளியிட்டு அனைவரையும் முட்டாளாக்கி விட்டிருக்கிறார்கள்.

நவீன தொழில்நுட்பங்களையார் யாரோவெல்லாம் எதற்கெதற்கோ பயன்படுத்தினால் நம்மவர்கள் எதற்கெல்லாம் பயன்படுத்துகிறார்கள் பார்த்தீர்களா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு கொண்டாடப்படுகின்றது என மக்களின் துயரங்களைக்குறைப்பதற்குநாட்டின் ஆட்சி முறையில் மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும் என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

மாற்றத்தைஏற்படுத்துவதற்காகப் பாடுபடவேண்டியது அனைத்து மக்களதும் கடமை எனவும் கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

நாடு முன்னர் ஒருபோதும் இல்லாத அளவிற்கு நெருக்கயை எதிர்கொண்டுள்ள சூழலில் நாங்கள் உயிர்த்தஞாயிறு தினத்தை கொண்டாடுகின்றோம் என தெரிவித்;துள்ள கத்தோலிக்க ஆயர்பேரவை உயிர்த்த ஞாயிறு என்பது கிறிஸ்தவ நம்பிக்கையின் புனிதமான மர்மம் மற்றும் உச்சக்கட்டம் இந்த நேரத்தில் நாங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியை சமாளிப்பதற்கு இறைவனை வேண்டுவோம் எனவும் தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று படுகொலைகள் இடம்பெற்று ஐந்து வருடங்களாகின்றன. இதன்போது 275 பேர் கொல்லப்பட்டனர். பலர் நிரந்தர நோயாளிகளாக மாறினர். துயரத்தில் சிக்குண்டுள்ளவர்களின் வலிகளிற்கு தீர்வை காண்பதற்காக நீதியை வழங்குமாறு இலங்கை ஆட்சியாளர்களைக் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவித்துள்ளது.

## சிறுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

the Children & Child அதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளது.

இந்த இணையவழி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் www.childprotection.gov.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசித்து இணையத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் சிறுவர்களின் பாலியல் புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய புகைப்படங்கள் குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உதவியுடன் ஜறுகு நிறுவனத்திடம் முறைபாடு செய்யலாம். பின்னர் குறித்த நிறுவனத்தினால் காணொலிகள் இணையத்தில் இருந்து அகற்றப்பட்டு சந்தேக நபர்களுக்குஎதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பிலான மேலதிக தகவல்களுக்கு 011 - 2 778911 இலக்கத்திற்கு சட்ட செயற்பாடுகள் தொடர்பில் அறிந்துகொள்ள 269 என்ற தொடர் இலக்கத்தின் ஊடாகவும் www.childprotection.gov.lk என்ற உத்தியோபூர்வ இணையத்தள பக்கத்திற்கு பிரவேசிப்பதன் மூலமும் அறிந்துகொள்ள முடியும்.

மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூகவலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, அமைச்சின் செயலாளர் யமுனா பெரேரா, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க மற்றும் சிறுவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தல் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் உறுப்பினர்களுடனான சந்திப்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கலந்துகொண்டார்.

மேற்படி குழுவின் அறிக்கை ஒக்டோபர் 2023 இல் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கையில், பலதரப்பினருடனும் ஆலோசித்து சிறுவர் பாதுகாப்பு தொடர்பான குறுகிய கால, இடைக் கால, நீண்ட கால தீர்வுகளுக்கான பரிந்துரைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்புக் கட்டமைப்புக்குள் பணியாற்றும் நிறுவனங்கள் தொடர்பிலான இடைக்கால பரிந்துரைகளை செயற்படுத்த முன்னுரிமை அளிக்கப் பட்டிருப்பதாகவும், பிரச்சினைகளின் தன்மைக்கு அமைவாக முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டத்தினை 06 மாதங்களில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு குறித்து இதுவரையில் எந்தவொரு அரசாங்கமும் கவனம் செலுத்தாமல் இருந்தமையும் மிகப்பெரிய பிரச்சினையாகியுள்ளதென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

தற்போதைய நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது கடினமாக இருந்தாலும், சிறுவர் பாதுகாப்பிற்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேற்படி குழுவின் அறிக்கையை விரைவில் செயற்படுத்த வேண்டியது அவசியமெனவும், அதற்காக அமைச்சு, பொலிஸ், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சீர்த்திருத்த நிலையங்களின் அதிகாரிகள் அர்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவொன்றை நிறுவுமாறு அறிவுறுத்தியிருப்பதாகவும், சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்புக்கான புதிய சட்டமூலங்களை கொண்டுவர எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, உரிய அமைச்சுக்களின் அதிகாரிகள், சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்னம், சொலிசிட்டர் ஜெனரல் அயேசா பியசேன, பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் சிறுவர் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதானிகளும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

## சரியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து ஒரு நாடாக குறிப்பிடத்தக்களவு சாதனைகளை நாம் அடைந்துள்ளோம். கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 983.7 மில்லியன் ரூபா ஏற்றுமதி வருமானம் கிடைத்துள்ளது.

ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் சுமார் 05 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். மேலும், நம் நாட்டில் 2.5% ஆக இருந்த தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கையை 3% ஆக அதிகரிக்க முடிந்துள்ளது. நாடு தற்போது சரியான பொருளாதாரப் பாதையில் செல்வதை இந்தத் தரவுகள் உறுதிப்படுத்துகிறது.

மேலும், ஆடை மற்றும் நெசவுத் தொழில் நிறுவனம் ஏறக்குறைய 500 பிள்ளைகளுக்கு டிப்ளோமா சான்றிதழ்களை வழங்கியுள்ளது. ஐடிபி (ணூம்ய( நிறுவனத்துடன் இணைந்து பாடசாலை தொழில் முயற்சியாளர் வட்டங்களை உருவாக்கி மாணவர்களை பாராட்ட முடிந்துள்ளது.

பாடசாலைக் காலத்திலேயே தொழில் முயற்சியாளர் சூழலை உருவாக்குவது மக்களை தொழில்முனைவோர் ஆக்குவதற்கு பெரும் ஆதரவை அளிக்கிறது என்பதையும் கூற வேண்டும். இதன் மூலம் நாட்டில் உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்க முடியும்.

குறைந்த வருமானம் பெறும் 24 இலட்சம் குடும்பங்களுக்கு நலன்புரி உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. முதலாம் ஆண்டு முதல் ஐந்தாம் ஆண்டு வரையிலான 17 இலட்சம் பாடசாலை மாணவர்களின் போசாக்குத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில், மதிய உணவு திட்டமும் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

களிமண், பித்தளை, பிரம்பு ஆகிய கைத்தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், இத்தாலி, கனடா, ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு இந்நாட்டுப் பொருட்களை ஏற்றுமதி செய்வது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஆசிய அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்து, சலுகை வட்டி விகிதத்தில் கடன் வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளோம்.

பிரம்புகளை எடுத்துச் செல்வதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சுடன் கலந்தாலோசித்து 500 பிரம்புகள் வரை கொண்டு செல்ல ஏற்பாடு செய்துள்ளோம். மேலும், களிமண் போக்குவரத்தில் அதிகபட்சமாக 05 கியுப்களை அனுமதிப்பதற்கு தேசிய அருங்கலைகள் பேரவையுடன் கலந்தாலோசித்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

## பிணை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றுக்கும் இடையிலான ஒத்துழைப்பு குறித்து மீளவலியுறுத்தப்பட்டதாகவும் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்புச் செயன்முறைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் கட்ட மதிப்பீட்டு குறித்து சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழுவினால் கடந்த வாரம் உத்தியோகத்தர்மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதற்குத்தமது இயக்குனர்சபையின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதன் பின்னர் இலங்கைக்கு மேலும் 337 மில்லியன் டொலர் கடன்நிதி விடுவிக்கப்படுமென நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் 2022 ஆம் ஆண்டு மிகமோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை ஓரளவு மீட்சியடைவதற்கு உதவிய மறுசீரமைப்பு செயன்முறைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கு புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது - என்றார்.

## ரம்புக்வெல ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரம்புக்வெல்ல, சிறைச்சாலை வானிலும், ஏனைய சந்தேகநபர்கள் சிறைச்சாலைகள் பஸ்ஸிலும் அழைத்து வரப்பட்டனர்.

ஹியுமன்இம்னோக்குளோபின் மற்றும் ரிடுக்ஸிமாப் என்று கூறி பதிவு செய்யப்படாத நிறுவனமொன்றிலிருந்து போலி மருந்துகளை கொள்வனவு செய்து வைத்தியசாலைகளுக்கு விநியோகித்தமை தொடர்பிலேயே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக்க ஸ்ரீ சந்திரகுப்த உள்ளிட்ட 9 பேருக்கு எதிராக இந்த வழக்கு இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், விசாரணையின் முன்னேற்றத்தை நீதிமன்றத்திற்கு அறிவித்ததுடன், சர்ச்சைக்குரிய மருந்துகள் விநியோகிக்கப்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் நோயாளர்கள் தொடர்பில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விசாரணை நடத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மன்றில் நேற்று அனுமதி கோரினார்.

அத்துடன், போலி மருந்துகள் வழங்கப்பட்ட நோயாளிகளுக்கு ஏற்பட்ட அறிகுறிகள், இறப்புகள் தொடர்பிலான தகவல்களை பெற்றுக் கொள்ளவும் அனுமதி கோரப்பட்டது.

இந்த கோரிக்கைகளுக்கு அனுமதி வழங்கிய மாளிகாகந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரம, சந்தேகநபர்களை ஏப்ரல் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## நீதிமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் மைத்திரியிடமிருந்து வாக்குமூலம் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்திருந்தது.

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கேள்வி - நாமல் ராஜபக்ச தேசிய அமைப்பாளராக இருப்பார். பழையவர்களை, கட்சியை விட்டு வெளியேறியவர்களை மீண்டும் வருமாறு அழைக்கிறார். சென்று வேலை செய்ய முடியுமா?

பதில் - அவர் பதவியை ஏற்று அவரது எண்ணப்படி செயற்படுவது அவரது பொறுப்பு. அது சரியா தவறா என்று சொல்ல எனக்கு உரிமை இல்லை. கட்சிக்கு நல்லது நடந்தால் அதை மட்டுமே விரும்புகிறோம்.

கேள்வி: - தேசிய அமைப்பாளர் பதவி மாற்றம் குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில் - பஸில் ராஜபக்ச இருப்பதுதான் எனக்குத் தனிப்பட்ட முறையில் பிடிக்கும். 2015ஆம் ஆண்டு மிகவும் கடினமான நேரத்தில் பொறுப்பை ஏற்றவர். நாங்கள் அவருடன் பணியாற்றப் பழகிபுரிந்துணர்வுடன் இருக்கிறோம். புதிய நபர் வரும்போது அவருடன் இணைந்து பணியாற்ற பழகிக் கொள்ளவேண்டும். அந்த சவாலை பஸில் எடுத்தால் நன்றாக இருக்கும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறேன்.

கேள்வி: - இந்த இக்கட்டான நேரத்தில் பஸிலால் இதை ஒன்றுசேர்க்க முடியுமா?

பதில்: - அரசியல் செய்யும்போது அனைத்தையும் சிந்திக்கும் திறன் கொண்டவராக இருக்கவேண்டும். அவர் அதைப்பற்றிச் சிந்திக்கிறார். நாம் வாக்குகளை மட்டும் நினைத்தால் தேசிய அமைப்பாளராக அரசியல் செய்ய முடியாது.

2005ஆம் ஆண்டு, பஸில் ராஜபக்ச திரைமறைவில் இருந்து மகிந்தவுக்காக தேர்தல் பரப்புரை செய்தார். அப்போதும் அவருடன் இணைந்து பணியாற்றினேன். அன்று முதல் இன்று வரை அவருடன் அரசியல் செய்தவன் என்ற முறையில் எனது தனிப்பட்ட கருத்தை முன்வைத்து வருகிறேன். தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக அவர் விலகியதும், கட்சியின் அரசியல் குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

கேள்வி: - தேசிய அமைப்பாளர் பதவிக்கு நாமல் ராஜபக்சவின் நியமனம் திருப்திகரமாக இல்லை என்பது உங்கள் கருத்தா?

பதில்: - அவரால் முடியுமா, இல்லையா என்பதைக் காட்ட அவருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். எதிர்கால முடிவுகளுடன் எடுக்கப்படும் தீர்மானங்களக்கு ஏற்ப அணியை ஒன்றாக வைத்திருப்பது அவரது பொறுப்பு. பஸில் அதைச் சரியாகச் செய்தார். எமக்கு எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும், அந்தப் பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டு செயற்பட முடிந்தது.

கேள்வி: - நாமல் ராஜபக்ச பெயரளவுக்கு மட்டும் தேசிய அமைப்பாளராக்கி பஸில் பின்னாலிருந்து வழிநடத்துவது போன்ற எண்ணம் வருமா என்று சில காலம் போனதும் தான் தெரியவருமா?

பதில்: - நான் அப்படி நினைக்கவில்லை. பஸில் என்பவர் எதையாவது செய்தால் தான் செய்தேன் என்பதைச் சொல்லுபவர். எனவே நாமலின் பின்னால் இருந்து அவர் பணியாற்றுவார் என்று சொல்ல முடியாது. அதேநேரம் அனுபவமும் உள்ளவர்கள் பின்னால் இருந்து எங்களுக்கு உதவவேண்டும். எங்களின் அரசியல் பயணத்தில், தந்தையிடமிருந்து பெற்ற அனுபவங்களால் இந்த நிலைக்கு வருகிறோம். ஏனென்றால், அவர்கள் எங்களை பின்னால் இருந்து வழிநடத்தினார்கள். மகிந்த இங்கிருந்து தலைமை தாங்க வேண்டும். அது நடப்பதை நான் விரும்புகிறேன்.

கேள்வி: - நாமலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களை ஆரம்பித்திருக்கிறாரா?

பதில்: இன்னும் ஐந்திலிருந்து பத்து வருடங்களில் நாமலுக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என நினைக்கிறேன். அப்போது அவர் போட்டியில் கலந்துகொள்ளும் அனுபவத்தைப் பெறலாம். அப்போது இந்த நிலையைப் புரிந்துகொண்டு தேர்தல் பணிகளைத் தொடங்கி புதிய பின்னணியை உருவாக்க அவருக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்த சவாலை ஏற்று அதை எதிர்பார்க்கலாம் என்றால், அந்தப் பொறுப்பை ஏற்று அதைச் செய்வது சரிதான்.

கேள்வி:- சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் தற்போது ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு பொருத்தமான எவரும் இல்லை என நீங்கள் நம்புகிறீர்களா?

பதில்: அவ்வாறான ஒருவரின் பெயரைக் குறிப்பிடுவதற்கு எனக்குத் தெரியவில்லை.

கேள்வி: நம்பிக்கையுடன் சொல்கிறீர்களா?

பதில்: ஊடகங்களுக்கு பொய் சொல்வேனா?

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# 33 சதவீத சம்பள உயர்வை வழங்குவதற்கே பெருந்தோட்டக் கம்பனிகள் தயாராகின்றன

## இதனை ஏற்கமுடியாது என்கிறார் அமைச்சர் ஜீவன் தொண்டமான்



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 33 சதவீத சம்பள உயர்வை வழங்குவதற்கே பெருந்தோட்ட கம்பனிகள் முன்வந்துள்ளன. இதனை ஏற்கமுடியாது. 1,700 ரூபா அவசியம் என்ற நிலைப்பாட்டில்நாம்உறுதியாகநிற்கின்றோம். என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான கலந்துரையாடலொன்று தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் தொழில் அமைச்சில் புதன்கிழமை நடைபெற்றது.

தேசிய தொழிலாளர் சபையில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் மற்றும் கூட்டு ஒப்பந்தத்தில்கைச்சாத்திடும்தொழிற்சங்கங்கள் இந்தச் சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தன.

இதன்போது, அமைச்சர்களான மனுஷ நாணயக்கார,ஜீவன்தொண்டமான்,இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் வடிவேல் சுரேஷ், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டனர்.

பெருந்தோட்டக் கம்பனிகளால் சம்பள உயர்வு தொடர்பில் வழங்கப்பட்டுள்ள முன்மொழிவு தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எனினும், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கம்பனிகளால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையை கூட்டு ஒப்பந்தத்தில்கைச்சாத்திடும்தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன.



இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறியவை வருமாறு -

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு 33 சதவீத சம்பள உயர்வை வழங்க கம்பனிகள் முன்வந்துள்ளன. எனினும், இதனை ஏற்கமுடியாது என அனைத்து தொழிற்சங்கங்களும் தெரிவித்தன. 1,700 ரூபாவையே கோரினோம். அந்த தொகையில் உறுதியாக நிற்கின்றோம் என தெளிவாக எடுத்துரைத்தோம்.

சம்பள நிர்ணய சபையை கூட்டுவதற்கு தொழில் அமைச்சர் ஒப்புகொண்டுள்ளார். ஏப்ரல் 10 ஆம் திகதிக்குள் நல்ல தீர்வு கிடைக்கும்.

நாட்கூலி முறைமை பொருத்தமற்றது. எனவே, நிரந்தரமானதொரு தீர்வை நோக்கி நகர வேண்டும். அந்த நிரந்தர தீர்வை அடைய காலம் எடுக்கும். அதுவரை ஆயிரம் ரூபாவிலேயேஇருக்கமுடியாது. அதனால்தான் 1,700 ரூபா கோருகின்றோம்.

ஒரு குடும்பமொன்று 3 வேளைகள் சாப்பிட்டு வாழ வேண்டுமெனில் 76 ஆயிரம் ரூபா அவசியம். ஆனால் பெருந்தோட்ட பகுதிகளில் சராசரி வருமானம் 42 ஆயிரமாக உள்ளது. இதனை ஏற்கமுடியாது. அனைத்து தொழிற்சங்கங்களும் அரசியல் செய்யாமல், ஒற்றுமையாகஇருந்தால்தீர்வைஅடையலாம். என்றார்.(05)

# அல் அக்ஸா பழைய மாணவர் சங்க கூட்டத்தில் கடும் கருத்து முரண்பாடு

### பல மணி நேர இழுபறின்பின் புதிய நிர்வாகம் தெரிவு

(கற்பிட்டி - சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பழைய மாணவ மற்றும் மாணவிகள் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பாடசாலையின் அதிபர் முஸ்தபா அன்சார் தலைமையில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பல்வேறு பட்ட கருத்து முரண்பாடுகள் குழப்பங்களுக்கு மத்தியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அதிபரின் தலைமை உரையை அடுத்து பழைய மாணவர் சார்பாக கலந்து கொண்ட ஆசிரியர் ஒருவரால் மேற்படி கூட்டத்திற்கு அதிபரான தாங்கள் அழைப்பு கடிதத்தில் கையொப்பம் இடாது ஆறு மாதத்திற்கு முன்பே காலாவாதியான பழைய மாணவர் ஒன்றியத்தின் இணை செயலாளர் கையொப்பம் இட்டு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தமை பற்றிய தெளிவை சபையோருக்கு விளக்கமளிக்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டது .

இதன் போது அதிபர் கேள்விக்கு பதிலலிக்காமல் நலுவல் போக்குடன் கூட்டத்தை தொடர்வதற்கு முயற்சித்தமையை அடுத்து கூட்டத்தில் வாதப் பிரதிவாதங்கள் மற்றும் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் அதிபர் கூட்டத்தில் இருந்து வெளியேறினார். சுமார் ஒரு மணி நேரகாலம் நீடித்த மேற்படி அசாதாரண நிலையை கட்டுப்படுத்தும் முகமாக கற்பிட்டியில் உள்ள கல்விமான்கள் ஏனைய பாடசாலை அதிபர்கள் அரசியல்வாதிகள் மற்றும் ஊர் நலன் விரும்பிகள் என பலரும் முயற்சி செய்து சபையோரை சுமுகமான நிலைக்கு கொண்டுவந்ததுடன் தற்போதைய அதிபருக்கு பெற்றோர்கள் மத்தியில் அதிருப்தியான சூழல் மற்றும் எதிர்ப்புக்களும் ஏற்பட்டுள்ள நிலையில் பாடசாலையில் இருந்து விலகி செல்வதற்கு விருப்பம் தெரிவித் விதுள்ளதாகவும் தகைமையான தரம் 01 அதிபர் ஒருவரை இப் பாடசாலைக்கு கொணடு வருவதற்கான முழு முயற்சிகளும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக இடம்பெற்று வருவதாக கற்பிட்டி பிரதேச சபையின் முன்னால் எதிர்கட்சி தலைவர் ஏ.ஜே.எம்.தாரிக் மற்றும் அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்கள் சிலராலும் சபையோருக்கு உறுதியளிக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து சுமுகமான நிலை ஏற்பட்டது.

மேற்படி கூட்டம் தற்போதைய அதிபர் தலைமையில் நடைபெற வேண்டும் என்ற சுற்று நிருபம் மற்றும் இப் பழைய மாணவ மற்றும் மாணவிகள் சங்கத்தின் நோக்கம் பற்றிய தெளிவை கற்பிட்டி கோட்டக்கல்வி பணிமனையின் ஆசிரியர் ஆலோசகர் பலீல் சபையோருக்கு தெளிவு படுத்தி மீண்டும் கூட்டத்திற்கு அதிபரை அழைத்து வந்து கூட்டத்தை வழிநடத்தினார்.

தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு ஆரம்பிக்கப்பட்டது

அதன்படி தலைவராக அதிபர் முஸ்தபா அன்சார் பதவிவழியாக தெரிவானார்.

செயலாளர் தெரிவிற்கு மூன்று நபர்களின் பிரேரணைகள் முன்மொழியப்பட்டது. அத் தெரிவு இரகசிய வாக்கெடுப்புக்கு விடப்பட்டது அதில் அதி கூடிய வாக்குகள் பெற்ற எம்.பீ.எம் அர்ஷத் (கிராம உத்தியோகத்தர்) செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

பொருளாளர் எம்.ஐ.எம் றூமி (உதவி அளவையாளர்), உபதலைவர் எம்.எஸ்.எம் ஹிஸ்மி(ஆசிரியர்), இணைச் செயலாளர். எம்.ஜீ.எம் ஹிஷான்(ஆசிரிய ஆலோசகர்), இணைப்பொருளாளர். எஸ். இஸட்.எம் கப்லி(தொழிலதிபர்) மேலும் ஏழு பேர் நிர்வாக குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

எம்.எப்.எப் பர்வின்(கிராம உத்தியோகத்தர்), எம்.என்.எம் அர்ஷாத்(வர்த்தகர்), அப்துல்ஜப்பார் றிப்கா(நிதி முகாமையாளர்),

எம்.ஐ.அப்துல் லத்தீப் (தொழிலதிபர்), கே.கலைச் செல்வி (சமூக செயற்பாட்டாளர்), எம்.எச்.எம் றிஹான்(அபிவிருத்தி உத்தியோகத்தர்), எம்.முஸம்மில் (என்.எச்.டி.ஏ), கணக்காய்வாளராக வி. ஜேசுதாஷன் தெரிவானார். (05)

# சுவாமி விபுலானந்தரின் 132 ஆவது பிறந்த தினம்







(ஹஸ்பர் ஏ.எச)

சுவாமி விபுலானந்தரின் 132 ஆவது ஜனன தின நிகழ்வு திருகோணமலை திஃஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வை சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுச் சபை ஏற்பாடு செய்திருந்ததுடன் இடம் பெற்றது.

இதில் சமூக கல்விச் சேவையாளர்களை பாராட்டிகௌரவிப்புக்களும் இடம் பெற்றதுடன் பாக்கு நீரிணையை கடந்து சாதனை படைத்த மாணவன் ஹ.தன்வந்த் உம் கௌரவிக்கப்பட்டார்.

இதில்திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இமானுவேல், பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதம குரு சோ.இரவிச்சந்திர குருக்கள், தவத்திரு அடிகளார் தென்கயிலை ஆதீனம் உட்பட திருகோணமலை வலயக் கல்வி பணிப்பாளர் தினகரன் ரவி, திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத்தின் தலைவர் ச.குகதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இன்னும் உறுதியான நடவடிக்கை தேவை

இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தியதற்காக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கெல்கொட அத்தே ஞானசார தேரருக்கு 4 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கியது.

கடந்த 2016ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூரகல விகாரைப் பிரச்சினை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஞானசார தேரர் இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் விசம் கக்கினார். இதுவே அவருக்கு இப்போது வில்லங்கமாகிவிட்டது.

அவரது கருத்துக்கள் தேசிய நல்லிணக்கம் மற்றும் மத நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவித்தன என்று சட்ட மா அதிபர் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். ஞானசார தேரர் மீது இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அந்த இரு குற்றச்சாட்டுக்களிலுமே அவர் குற்றவாளிதான் என்று நீதிமன்றம் இப்போது தீர்ப்பளித்துள்ளது. ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, தேரருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதித்தார்.

முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் ஸாலி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் காவல்துறையில் செய்த முறைப்பாடுகளின் அடிப்படையில் ஞானசார தேரருக்கு எதிரான இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு ஞானசார தேரருக்கு எதிராகவே வரும் என்பதைச் சில காலத்திற்கு முன்பே ஊகிக்க முடிந்தது. ஏனெனில் தனது அன்றைய கருத்துக்களுக்காக அண்மையில் அவர் திடீரென முஸ்லிம் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டார்.

நீதிமன்றத்தின் கடும் பார்வையைத் தணிக்கும் வகையிலேயும் தண்டனையில் இருந்து தப்பும் நோக்குடனுமே அவர் மன்னிப்புக் கேட்டார் என்பதை ஊகிப்பது கடினமல்ல. இருந்தாலும் நீதிமன்றம் அவரது மன்னிப்பை நிகழ்ந்த குற்றத்துக்கான பரிகாரமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தீர்ப்புத் தெளிவாக்குகின்றது. இலங்கையில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக பௌத்த பேரினவாத கருத்துக்களின் அத்துமீறல்கள் எல்லை மீறியிருக்கும் ஒரு காலப் பகுதியில் இந்தத் தீர்ப்பு மிகவும் வரவேற்கப்படக்கூடியதே!

இந்த நாடு பௌத்த சிங்கள மக்களுக்கு மட்டுமே உரித்தானது தமிழ் முஸ்லிம் மக்கள் இங்கு இரண்டாம்தரக் குடிமக்களே என்கிற பௌத்த சிங்களப் பேரினவாதக் கருத்துக்களின் மீது வைக்கப்பட்ட கனதியான அழுத்தம் இந்தத் தீர்ப்பு. தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக அல்லது பௌத்தம் தவிர்ந்த ஏனைய மதங்களுக்கு எதிராக கடும்போக்குக் கருத்துக்களை இனிவரும் காலங்களில் வெளிப்படுத்துவதற்கு முன்னர் ஒன்றுக்கு இரண்டு தடவை எவரையும் யோசிக்க வைக்கும் இந்தத் தீர்ப்பு.

ஆனால், இதனால் மட்டும் பௌத்த சிங்கள பேரினவாத, மேலாதிக்கப் போக்கு கட்டுப்பட்டுவிடவோ நின்றுவிடவோ போவதில்லை. இந்த மேலாதிக்கப் போக்கின் ஒரு அதீத வடிவம் மட்டுமே ஞானசார தேரர். அவர் தனது அளவுக்குமீறிய செயல்களின்மூலமாகஅனைத்துத்தரப்பினரதும்கவனத்தையும் கவர்ந்திருந்தார். அதனால் இப்போது தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார். ஆனால், இதே போக்கு பிக்குமார்களில் பெரும்பாலானவர்களிடம் இருக்கிறது. ஞானசாரர் அளவிற்கு அவர்கள் தமது கருத்து நிலைப்பாட்டைத் தீவிர செயல்கள் மூலம் வெளிப்படுத்தவில்லையாயினும் அவர்களின் நிலைப்பாடு மிக மோசமான தாக்கத்தை இலங்கையில் செலுத்துகின்றது.

உதாரணத்திற்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தபோது, அதனை எதிர்த்து பிக்குமார்கள் அரசமைப்பின் பிரதிகளைத் தீயிட்டுக் கொளுத்திய சம்பவத்தைக் குறிப்பிடலாம். இதுவும் நாட்டின் அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் ஊறுவிளைவிக்கும் பௌத்த, சிங்கள மேலாதிக்கப் போக்கின் விளைவே. ஆனால், சட்ட மா அதிபர் திணைக்களத்தால் இந்த விவகாரம் கண்டுகொள்ளப்படவேயில்லை. அரசமைப்பைக் கிழிப்பதும் எரிப்பதும் பாரதூரமான குற்றமாகக் கருதப்படுகின்றபோதும் அந்த பிக்குகளுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இலங்கையில் நீடித்த அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தவேண்டுமாயின் ஒரு ஞானசார தேரரை மட்டும் தண்டித்துப்பயனில்லை. பௌத்தசிங்களமேலாதிக்கவாதத்தின் செயல் வடிவமாக, வடிகாலாக இருக்கும் அனைவருக்கு எதிராகவும் சட்ட மா அதிபர் திணைக்களம் இதே தீவிரத்துடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவே இலங்கையின் சிறந்த எதிர்காலத்தை உறுதிப்படுத்தும்.

# எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்...

**என். சத்திய மூர்த்தி**

அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் என்ற ஹோதாவில் வவுனியா வருகை தந்திருந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி பி) தலைவர் அநுர குமார திசாநாயக்க, தங்களது அணி ஆட்சியில் அமர்ந்தால், அதில் வட மாகாணத்தை சேர்ந்த தமிழர்களும் அமைச்சர்களாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று கூறிச் சென்றார். அவருடைய உறுதிமொழி தமிழர்கள் மத்தியில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது கண்கூடு.

இதுகுறித்து, மிதவாதத்தமிழ்த்தலைவர்களுடன் தாங்கள் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அநுர அப்போது தெரிவித்தார். மிதவாதிகள் என்று அவர் யாரைக் குறிப்பிட்டார் என்று தெரியவில்லை. இனப்போர் முடிவடைந்து பதினைந்து ஆண்டுகளான பின்னர், தமிழர் தரப்பில் அதனை முன்னெடுத்த விடுதலை புலிகள் அமைப்பின் அடையாளப்படுத்தப்பட்ட தலைவர்களோ அல்லது பிரதிநிதிகளோ இப்போது இல்லை. பிராபாகரன் உயிருடன் இருக்கிறார், அவருடைய மகள் உயிருடன் இருக்கிறார் என்றெல்லாம் அவ்வப்போது அடித்து எழுப்பப்பட்டாலும், அவற்றில் உண்மை இல்லை.

இந்தப் பின்னணியில், தமிழர்களில் மிதவாத அரசியல்வாதிகள்என்றுஅநுர குறிப்பிடுவதுயாரை? காரணம், மிதவாதத் தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம் என்று தெரிவித்த அநுர, அதே மூச்சில், அவ்வாறு தாங்கள் இணைத்துக்கொள்ளும் தமிழ் தலைவர்கள், தீவிரவாதிகளாகவோ இன வெறியர்களாகவோ இருக்கக்கூடாது என்றும் கூறியுள்ளர். தமிழ் சமூகத்தில் இன்று தீவிரவாதிகளே இல்லை என்று இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ள சூழலில், தீவிரவாதிகள் என்று அநுர குறிப்பிடுவது யாரை?

அல்லது, தமிழர் தரப்பில் இனவாதம், தீவிரவாதம் என்றெல்லாம் அநுர இன்னமும் கூறிக்கொண்டிருப்பதன் அளவுகோல்தான் என்ன? அதிலும் குறிப்பாக, ஜேவிபி போன்ற பேரினவாத கட்சி ஒன்றின் தலைமையிடமிருந்து தமிழர்கள் நற்சான்றிதழ் பெறவேண்டும் என்றால், அதன் காரண-காரியங்கள்தான் என்ன? இந்தக் கேள்விகளை ஜேவிபி-யுடனும் உறவாடலாம் என்று கருதும் தமிழர் தரப்புகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

காரணம், வவுனியா வந்து சென்ற கையோடு, கானாடவிற்கு பயணித்த அநுர, அங்குள்ள இலங்கையருடன் கருத்தாடல் செய்தார். அவ்வாறானஒருகூட்டத்தில்இடைபுகுந்தஒருதமிழ் இளைஞர், ஜேவிபி-யின் இனப்பிரச்சினைக்கான தீர்வு திட்டம் குறித்து கேள்வி எழுப்பினார். அதற்கு அநுர பதில் கூறவில்லை என்பது மட்டுமல்ல. அந்த கேள்வி எழுப்பிய இளைஞர், சிலரால் கூட்டத்தில் இருந்து வெளியேற்றி அழைத்துச் செல்லப்பட்டதையும் சமூக வலைதளங்களில் காணமுடிந்தது.

## புற்றீசல் பிரச்சினைகள்

இதன்மூலம்அநுர,இலங்கையில்வாழும்தமிழ் மக்களுக்குகூறும்செய்திஎன்ன? இனப்பிரச்சினை குறித்துத் தான் பேசப்போவதில்லை என்பது மட்டும் தானா? அல்லது, தான் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால், இனப்பிரச்சினைக்கான தீர்வு தனது அரசு திட்டத்தில் இடம் பெறாது என்றா?

முன்னதாக வவுனியாவில் கருத்தாடிய அநுர, அங்கும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து பேசவில்லை. மாறாக, தமிழர்களின் மொழி மற்றும் காணிப் பிரச்சினை ஆகியவை தீர்க்கப்படும் என்று மட்டுமே கூறினார். குறிப்பாக, தமிழ் மக்கள் அரசுடன் ஊடாட தமிழ் மொழியைப் பயன்படுத்தும் உரிமை உறுதி செய்யப்படும் என்பதில் மட்டுமே அவர் தெளிவான ஒரு கருத்தைப் பதிவு செய்தார்.

ஏன், காணி பிரச்சினை குறித்துக்கூட எந்தவித தெளிவான கருத்தையும் அவர் முன் வைக்கவில்லை என்றே பத்திரிகை செய்திகளில் இருந்துபுரிந்துகொள்ளமுடிந்தது. அதிலும்குறிப்பாக வெடுக்குநாறி பிரச்சினையைப்போன்றுபல்வேறு மத நம்பிக்கை சார்ந்த காணி பிரச்சினைகள் வடக்கிலும் கிழக்கிலும் புற்றீசல் போன்று வளர்ந்து வந்துள்ள இந்தக் காலகட்டத்தில், அவை குறித்த அநுரவின் மௌனம், ஒரு செய்தியைத் தெரிவித்தது எனலாம். அது எத்தகைய செய்தி என்று யோசிக்கவே தேவையில்லை.

## பொது வேட்பாளர்

அநுராவின் வவுனியாப் பயணத்தைத் தொடர்ந்து, யாழ்பாணத்தில், தமிழ் அறிவுஜீவிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் சிலர் கூடி பேசினர். அதனால் மட்டுமே இரண்டு கூட்டத்திற்கும் தொடர்பு உண்டு என்று கூற முடியாது. அவ்வாறு கூறவும் கூடாது.

யாழ்பாண கூட்டத்தில் பேசிய தமிழ் அறிவுஜீவிகள் பலரும், ஜனாதிபதி தேர்தலில் தங்களது சமூகத்தில் இருந்து ஒரு பொது வேட்பாளரை களமிறக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தனர். அதற்கு அவர்கள் கூறிய காரணங்கள் இரு வகைப்படும். ஒன்று, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இனி தென்னிலங்கை அரசியல் மற்றும் அரசு தலைமைகளிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது. எனவே, தமிழர்கள் தங்களது எதிர்காலம் குறித்த தெளிவான சிந்தனையைப் பெற வேண்டும்.

அவர்களது இரண்டாவது காரணம், ஜனாதிபதித் தேர்தலில் தனி வேட்பாளரைக் களமிறக்கி, அவருக்கு வடக்கு, கிழக்கு மற்றும் வெள்ளவத்தை தமிழர்களின் வாக்குகள் குவிந்தால், அதன் பாதிப்பு தென்னிலங்கை வேட்பாளர்களின் வெற்றி-தோல்வியில் பிரதிபலிக்கும். அதன் பின்னரே அவர்கள்தமிழர்களைப்புறந்தள்ளாமல், கவனத்தில் கொள்வார்கள். இது, பழைய மொந்தையில் பழைய கள்!

## பேரம் பேச...

யாழ்பாண நிகழ்ச்சியில் பங்குபெற்ற மூத்த அரசியல் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன், தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று கூடினால் மட்டுமே. சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களுடன் அரசியல் தீர்வு குறித்து பேரம் பேசுவதில் ஒரு அர்த்தம் இருக்கும் என்ற தொனிப்படும் படி பேசினார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. அது உண்மை என்றால், இதுவும் பழைய குருடி, கதவை திறடி என்ற கதைதான்.

ஒன்று, கடந்த காலங்களில் சிங்கள அரசியல் தலைமைகளுடன் ஒட்டாடி, உறவாடி, பேச்சுவார்த்தைகள் நடத்திய சம்மந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பு சாதித்தது என்ன? இனப்போர் காலத்திய தேர்தல்களை விட்டுவிடுவோம். தொடர்ந்த 2010 ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவுடன் எழுத்துபூர்வமாக ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது என்றெல்லாம் பத்திரிகை செய்திகள் தெரிவித்தன.

பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறவில்லைஎன்பதுவேறுவிடயம். அவ்வாறுஅவர் வெற்றி பெற்றிருந்தாலும், தான் சார்ந்த இராணுவ படையினரின் தமிழர் எதிர்ப்பு நிலைபாட்டை மீறி அவரால் ஏதாவது முடிவு எடுத்திருக்க முடியுமா? அடுத்து வந்த 2015 தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனாவிற்கு தமிழர்கள் வாக்குகள் வெகுவாக கை கொடுத்தது என்பதே உண்மை.

ஆனால், அவருக்கும் அரசியல் முடிவுகளுக்கும் தொடர்பே இல்லாத வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே பார்த்துக் கொண்டார். சம்மந்தன் -சுமந்திரன் தலைமையிலான கூட்டமைப்பு தலைமையோ, ரணிலுக்கு தொடர்ந்து 'ஜால்ரா' போட்டதைத் தவிர வேறு எதனையும் சாதித்துவிடவில்லை.

## தமிழனின் விதி

இந்தப் பின்னணியில், ஒருமித்த தமிழர் சமூக-அரசியல் தலைமை என்ன சாதிக்க நினைக்கிறது? என்ன சாதிக்க முடியும்? அதன் பின்விளைவுகள், பக்கவிளைவுகள் ஆகியவை என்ன? என்பது குறித்தெல்லாம் கலந்து விவாதித்து தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். அவலை நினைத்துக் கொண்டு உரலை எத்தனை காலத்திற்குதான் இடித்துக் கொண்டிருக்க முடியும்? அப்படியே எத்தனை காலம்தான் அப்பாவி தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும்?

இன்றுள்ள அரசியல் தலைவர்களில் பலரும் அடுத்ததேர்தல்நடைபெறவுள்ளஐந்துவருடங்களில் காணமால் போயிருப்பார்கள். அல்லது வயது மூப்பு, உடல் உபாதைகள் காரணமாக அரசியலில் இருந்து விடை பெற்றிருப்பார்கள். பெயர்சொல்ல வேண்டாத சிலர். எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியுற்றால் தங்களது அரசியல் வாழ்விற்கு அந்திமம் பாடிவிடலாம்.

அவர்களில் யாருமே, பெயர் சொல்லும் அளவிற்கு அடுத்த தலைமுறை தலைவர்களை வளர்த்துவிடவில்லை. ஆனால், அடுத்ததலைமுறை தமிழர்களின் வாழ்வில் மட்டும் தொடர்ந்து விளையாடுவதை நிறுத்தப் போவதில்லை. இதுதான் இன்றைய தமிழனின் தலைவிதி!

# திருக்கோவில் வைத்தியசாலை சேவை 17 நாள்களின் பின்னர் வழமைக்கு

(எஸ்.கார்த்திகேசு)

17 நாள்களின் பின்னர் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் சேவைகள் நேற்று முதல் வழமைக்குத் திரும்பின.

அம்பாறை திருக்கோவில் ஆதார வைத்தியசாலை கடந்த 17 நாள்களின் பின்னர் பொது மக்களுக்கான வைத்திய சிகிச்சைகள் நேற்று முதல் வழமைக்கு திரும்பியுள்ளன என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகிலாராணி இஸ்ஷதீன் தெரிவித்து இருந்தார்.



திருக்கோவிலில் மரதன் ஓடிய பின்னர் ஏற்பட்ட சுகவீனம் காரணமாக மருத்துச் சிகிச்சைகள் பலனின்றிய நிலையில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக கடந்த 11ஆம் திகதி முதல் வைத்தியசாலையின் வைத்தியர்களின் பணிபகிஸ்கரிப்பு காரணமாக வைத்திய சேவைகள் முழுமையாக இடை நிறுத்தப்பட்டு இருந்தன.

இதனைத் தொடர்ந்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கக்கினருக்கும் இடையில் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியாக தொடர்ந்து இடம்பெற்று வந்த பல்வேறுபட்ட சுற்றுப் பேச்சுகள் மற்றும் பொலிஸாரின் துரித சட்ட நீதியான நடவடிக்கைகள் காரணமாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு இருந்தன.



இதனையடுத்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினருக்கும் இடையில் புதன் பிற்பகல் வேளையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் வைத்தியசாலையின் அவரசசிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு இருந்தது.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் பூரணமான வைத்திய சேவைகள் நேற்று (வியாழக்கிழமை) தொடக்கம் மருத்துவ சிகிச்சைகள் வழமைபோல் இடம்பெறும் என புதன்கிழமை கூட்டத்தில் தீர்மாணம் எட்டப்பட்டு இருந்த அதேவேளை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரினால் உத்தியோகபூர்வமாக கடிதமும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் வழங்கி வைக்கப்பட்டு இருந்தது.

இதனைத்தொடர்ந்துவைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினர் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மற்றும் இவ் வைத்தியசாலைஷ்யினை மீளவும் திறப்தற்கு சட்ட ரீதியான உதவிய பொலிஸ் அதிகாரிகள் சுகாதார துறைசார் அதிகாரிகள் பிரதேச சமூக நலன்விரும்பிகள் அனைவருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்து இருந்தனர்.

இந்தக் கலந்தரையாடல் கூட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மாவட்ட இணைப்பாளர்கள், பிரதேச மாவட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள், வைத்தியர்கள், மதகுருமார்கள், அபிவிருத்தி குழு நிர்வாகிகள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அகில உலக இராமகிருஷ்ண மிஷினின் 16 ஆவது தலைவர் சங்ககுரு ஸ்ரீமத் அக்கினியுடன் சங்கமம்







(வி.ரி.சகாதேவராஜா)

அகில உலக இராமகிருஷ்ண மிஷனின் பெருந்தலைவர் அதி வணக்கத்திற்குரிய சங்ககுரு ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜ் புதன்கிழமை இரவு 9 மணியளவில் வேலூர் மடத்தில் அக்கினியுடன் சங்கமமானார்.

அகில உலக இராமகிருஷ்ண மிஷினின் 17 ஆவது தலைவராக வரவிருக்கும் ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்த ஜீ மகராஜ் உள்ளிட்ட பெரும் துறவிகளின் முன்னிலையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் முன்னிலையில் அவரது இறுதிக்கிரியைகள் நடைபெற்றன.

கொல்கத்தாவில் உள்ள இராமகிருஷ்ணா மிஷன் சேவா பிரதிஷ்டானில், அதி வணக்கத்திற்குரிய சங்ககுரு ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜ் கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார். அவருக்கு வயது 94.

மகாராஜின் உடல் பேலூர் மடத்தில் (கலாசார மண்டபம்) அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதனால் செவ்வாய்க்கிழமை இலங்கை வந்த அகில உலக இராமகிருஷ்ண மிஷன் துணைப் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி போதசாரானந்தஜி மகராஜ் அவசரமாக நேற்று நாடுதிரும்பினார்.

அவர் கலந்து கொள்ளவிருந்த முப் பெருவிழா உள்ளிட்ட அனைத்துநிகழ்வுகளும் திட்டமிட்டபடி நடைபெறும் என மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தெரிவித்தார்.(05)



## திறைசேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்த வேளையில் அந்நாட்டு அரசினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

கிரீஸினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவுசெய்ததன்விளைவாக அரசுக்கு1,843,267,595ரூபாநட்டம் ஏற்பட்டதாக அம்முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது மதிப்பீட்டின் பின்னர் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

இதன் பின்னர் பி.ப 4.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை அரசாங்கத் தரப்பினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும்.

2024 ஏப்ரல் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணி முதல் பி.ப 4.00 மணிவரை வங்கித்தொழில்(திருத்தச்)சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான 2358/70 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, சேர் பெறுமதி வரிச்சட்டத்தின் 2363/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான 2370/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப 4.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் நடத்தப்படவுள்ளது.

## தேர்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் மூலமே நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருப்பவர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தில் நாடு பெரும் நெருக்கடிக்கடியில் இருந்து மீண்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். நாட்டைத் தற்போது பொறுப்பேற்க தயார் என குறிப்பிடும் தரப்பினர் 2022 ஆம் ஆண்டு ஓடி ஒளிந்ததை மறந்து விடக் கூடாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆளும் தரப்பை நாங்கள் தோற்றுவிப்போம். அவரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம். ஐக்கிய மக்கள் சக்தியினரும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் பற்றிப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவே மைத்திரிபால சிறிசேன, ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரைத் தவறாக வழிநடத்தினார் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் என்றார்.

## தனிநபர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவீனம் பதிவானதுடன் அது 16,268 ஆகும். உத்தியோகபூர்வ வறுமைக் கோடு தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின்படி தேசிய மற்றும் மாவட்ட அளவில் விலை மாற்றங்களைக் கணக்கில் கொண்டு சரிசெய்யப்படுகிறது.

இதேவேளை கடந்த வருடத்திற்கான பொருளாதார வளரச்சி வீதம் -2.3 சதவீதம் (2015ஆம் ஆண்டின் அடிப்படையில்) ஆக வெளியிடப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி வீதம் 4.5 ஆகவும், 1.6 சதவீதமாக மூன்றாம் காலாண்டிலும் மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# ஒன்றிணைந்து செயற்பட்டால் சமூகம் முன்னேற்றமடையும்!

## எஸ்.எம்.சபீஸ் அறிவுரை





(அபு அலா)

ஒரு சமூகம் முன்னேறவேண்டும் என்றால், இளைஞர்கள் தொடர்ச்சியாக அறிவைப் பெருக்கிக்கொள்வதோடு ஒருமைப்பாட்டுடன் ஒன்றிணைந்து செயற்படுவதிலேதான் அந்த சமூகம் முன்னேறமுடியுமென அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் கிழக்கின் கேடயத் தலைவருமான எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

அம்பாறை - பாலமுனை பிரதேசத்தில் இடம்பெற்ற கிழக்கின் கேடயம் புதிய அங்கத்தவர்கள் இணைந்துகொள்ளும் இளைஞர்கள் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

புத்தாக்க கல்வியறிவை அடித்தளமாகக் கொண்ட சமூகமாக நாம் வளர்வதுடன், ஓர் ஒருமைப்பாட்டுடன் எல்லோரும்சேர்ந்து இயங்கும்பொறிமுறைமைக்குள் நாம் உள்வாங்கப்படுகின்றபோதுதான் அந்த சமூகம் பொருளாதார ரீதியான முன்னேற்றத்தை பிரசவித்துக்கொள்ள முடியும். அந்த பொறிமுறையைக் கொண்டுவருவதே கிழக்கு கேடயத்தின் முதல் பணியாக இருந்து வருகின்றது.

இளைஞர் யுவதிகளுக்குள் இருக்கின்ற திறன்களை வெளிக்கொணரவைக்கும்செயற்பாடுகளை கிழக்கின் கேடயம் முன்னிறுத்தி செயற்படுகின்ற விடயங்களை அவதானித்த இளைஞர், யுவதிகள் அம்பாறை மாவட்டத்தையும்தாண்டி மாகாணம், தேசியம் என்றரீதியில் இணையத் தொடங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கிழக்கின்கேடயஅங்கத்தவர்சட்டக்கல்லூரிமாணவன் முஹம்மது அசாம், பொருளாளர் ஏ.எல்.ருஸ்தி அஹ்மத், ஆலோசகரும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளருமான ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.எம்.ஹனீபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(05)



# இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் காரைதீவில் குடும்ப சுகாதார நிலையம்



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் காரைதீவு சாரதா நலன்புரி நிலையத்தில் இன்று(வெள்ளிக்கிழமை) மாலை 5 மணிக்கு குடும்ப சுகாதார நிலையம்திறந்து வைக்கப்படவுள்ளது.



இராமகிருஷ்ணமிஷன்மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற இருக்கின்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பிக்கின்றார்.

இந்தநிலையம்பொதுமக்களுக்காக முற்றிலும் இலவசமாக நடத்தப்பட இருக்கின்றது.

வாரத்தில் திங்கள் புதன் வெள்ளி ஆகிய தினங்களில் மாலை ஐந்து மணியிலிருந்துஆறுமணிவரையான காலப்பகுதியில் இங்கு இலவசமாக சுகாதார சேவை இடம்பெற இருக்கிறது.

கல்முனை ஆதாரவைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் இரா. முரளீஸ்வரனின்ஒத்துழைப்புடன்காரைதீவுவைத்தியர்கள்மற்றும்சுகாதாரசேவையாளர்கள் தொண்டரடிப்படையில் பணியாற்ற முன்வந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை கடந்த புதன்கிழமை மாலை உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் துணை பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி போ சாரானந்தைக்கு மகராஜ்காரைதீவுக்குவிஜயம்செய்தார்.

சாரதா சிறுமியர் இல்லத்தை பார்வையிட்டதோடு அங்கு புதிதாக திறந்து வைக்கப்பட இருக்கிற குடும்ப சுகாதார நிலையத்தையும் பார்வையிட்டார். (05)

# அகில உலக இ.கி.மிஷன் துணைபொது செயலாளர் ஸ்ரீமத் சுவாமி போதசாரானந்தஜி காரைதீவு வருகை



(வி.ரி. சகாதேவராஜா)

இந்தியாவில் இருந்து வருகைதந்த அகில உலக ராமகிருஷ்ண மிஷன் துணைப் பொதுச்செயலாளர்ஸ்ரீமத்சுவாமி போதசாரானந்தஜி மகராஜ் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த காரைதீவு மண்ணுக்கு புதன்கிழமை மாலை விஜயம் செய்தார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 132 ஆவது பிறந்த தினத்தில் அவர் அங்கு விஜயம் செய்தார்.



முதலில், சுவாமி இராமகிருஷ்ண மிஷன்சாரதாநலன்புரிநிலையத்திற்கு விஜயம் செய்தார்.

அவருடன், இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரா்ச்சிதானந்தாஜீமகராஜ்ஆகியோரும் வருகை தந்தனர். மட்டக்களப்பு இ.கி.மிஷன் அபிமானிகள் பலரும் கலந்து கொண்டனர். அங்கு திறந்து வைக்கப்பட இருக்கின்ற குடும்ப சுகாதாரநிலையத்தைபார்வையிட்டார். சாரதா இல்ல செயற்பாடுகளையும் அவதானித்தார்.



அதன்பின்பு குழுவினர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த இல்லத்திற்கு விஜயம் செய்தார்கள்.

அங்கு சுவாமிகளின் திருவுருவச் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்ததுடன், இல்லத்தில் விசேட பூஜையையும் நடத்தினார்கள்.

அங்குள்ள அருங்காட்சியகம், யாழகம்போன்றவற்றைபார்வையிட்டு வியப்படைந்தார். சுவாமி தொடர்பான ஆவணங்களை கண்டு ஆர்வத்துடன் பார்த்து பாராட்டினார்.

அச்சமயம் பணிமன்ற ஆலோசகர் விரி.சகாதேவராஜா, தலைவர் சோ.சுரநுதன் ,செயலாளர் கு.ஜெயராஜி ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

அங்குள்ள விபுலானந்த நர்த்தனாலயத்தில்பயிலும்நடனமாணவிகளுக்கு சுவாமி ஆசீர்வாதம் வழங்கினார். (05)

# பொத்துவில் பிரதேச செயலகம் தேசிய ரீதியாக முதலாம் இடம்!



(அபு அலா)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சிறுவர் ஓய்வூதிய திட்ட ஆட்சேர்ப்பின் மூலம், பொத்துவில் பிரதேச செயலகம் 25 லட்சத்து 59 ஆயிரத்து 300 ரூபா பணத்தை சேமிப்பு தொகையாக வைப்புச் செய்து தேசியரீதியில்முதல்நிலையை பெற்றுக்கொண்டது.

இதனை பாராட்டி கௌரவித்துநினைவுச்சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, பொத்துவில் பிரதேசசெயலாளர்சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயில், நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கி கௌரவித்தார்.

கடந்த வருடம் (2023) நாடளாவிய ரீதியிலுள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சிறுவர் ஓய்வூதியத்திட்ட ஆட்சேர்ப்பின் மூலம், பொத்துவில் பிரதேச செயலகம் 648 இலக்கையும், 4152 பேரை இணைத்து 25 லட்சத்து 59 ஆயிரத்து 300 ரூபா சேமிப்பு பணத்தை வைப்புச் செய்து 640.74 சதவீதம் அடிப்படையில் செயற்பட்டு தேசிய ரீதியில் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர் Kalaikkathir




# சக்தி வழிபாடு





து.ரிஷிகேசன்
11
யாழ். இந்துக் கல்லூரி

'எங்கும் எதிலும் சக்தியடா' என்ற பாவரி போல நீக்கமற நிறைந்து இருப்பவர் அன்னை பராசக்தி. பூமி சுழன்ற வண்ணமே உள்ளது. எமது நாடியும் துடித்த வண்ணமே உள்ளது. இதனால் உயிர் அயராது இயங்குகின்றது. அணு அசைவதை விஞ்ஞானம் விளம்பும் இதை 'சென்று சென்று அணுவாய்த்தேய்ந்து தேய்ந்து........' என்று மணிவாசகர் அணிசெய்தார் அவ்வாறு பூமியும் நாடியும் 'அணுவும் அசைவது நின்றால் எல்லாம் அழிவது தெளிவு ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே...' என்பது அப்பர் செப்பிய அருள் வாக்கு அவ்வாறு ஈசன் ஆடி எம்மை காக்க சக்தியே காரணம் சிவன் காரியமாகவும் சக்தி காரணமாகவும் நின்று எமக்கு சித்தியும் முக்தியும் தருவர்.

சிவனின் இடப்பாகத்தை பிடித்து சக்தி நின்று நிலவும் உருவே அர்த்த நாரீஸ்வரர் ஆகும். இவர்களின் ஆட்டமே ஐந்தொழிலாகும். இதற்கு காரணம் உமாதேவியே. இதனால் உலகத்தில் நடைபெறும் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாய் திகழும் சக்தி சொரூபம் ஆகும். இதையே திருமூலநாயனார் 'அவளின்றி ஆவது ஒன்றுமில்லை' எனக் குறிப்பிட்டார். அவளையே சார்ந்து நின்றால் சஞ்சலம் வராது என்பது பாரதியின் நம்பிக்கை.

**'எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லவே எண்ணல் வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்த நல்லறிவு வேண்டும்**

பண்ணிய பாவமெல்லாம் பரிதிமுன் பனியெ போல
நண்ணிய நின்முன் இங்கு நசித்திடல் வேண்டும் அன்னாய்'
எனக்கூறி நமக்கும் நம்பிக்கையூட்டுகின்றான் பாரதி

பேசாப்பிறவியாய்ப்பிறந்து சக்திமேல் பித்தனாய் பக்திகொண்டு நித்தமும் பூமாலை சாத்திய குமரகுருபரனை பார்போற்றும் பாவலன் ஆக்கியவள் அன்னை பராசக்தி இது பாரதியின் நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டு ஆகும் சக்தியின் மகிமையை அறிந்து மகாகவி கம்பனும் அவளை துதிக்கின்றான்

'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்அம்மை – தூய
உருப் பளிங்கு போல் வாழ்-என்உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்' என அற்புதத் திருவந்தாதி பாடுகிறான். அவ்வாறே தன் நாவசைத்த நாயகியாம் சக்திக்கு சகலகலாவல்லி எனக் கூறி புகழ்மாலை சூட்டினார் குமரகுருபரர். சக்திமேல் அளவற்ற பக்திகொண்ட அபிராமிப்பட்டரும் உள்ளம் உருகஉதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் ..... என அந்தாதியை அருந் தமிழிலே தந்தார். பட்டரின் பாக்கள் கேட்போரின் நெஞ்சை ஈரமாக்கும் பாவரிகள் அதில் சக்தி தத்துவமுண்டு சஞ்சலம் தீர்க்கும் சக்தி சரித்திரமுண்டு 'பூத்தவரே புவனம் பதின்னாங்கையும் காத்தவளே பின் கரந்தவேளே' என சக்தியை மெச்சுகிறார்

காலத்திற்கு காலம் இவ்வாறு சக்தி வழிபாடு வளர்ந்து சென்றது சக்தி தத்துவ மந்திரங்கள் மூலம் காணலாம்.

'ஶ்ரீலிதா மந்திரம்'

'திரிசத மந்திரம்' என அது விரிந்து செல்கிறது ஆதி கால நாகரிக தோற்றத்தின் போதே சக்தி வழிபாடு ஆரம்பமானது. என்பதனை மொகஞ்சதாரோ நாகரிக சின்னத்தில் காணலாம். அதில் பெண்ணொருத்தியின் வயிற்றிலிருந்து தாவரம் வளர்வது போல சித்தரிக்கப்பட்டுள்ளது இவ்வாறு சக்தியை வழிபட்டு தங்கள் வாழ்வின் மூலம் நம்பிக்கை ஊட்டும் உத்தமர் பேரில் இன்று நவராத்திரி போன்ற விரதங்களும் கிரியைகளுடன் தொடர்புற்று உளரீதியான பலம் தரும் கேதார கௌரிவிரதமும் நமமால் அனுட்டிக்கப்ப டுகின்றது இவ்வாறு அவளின் பேறுபெற்று இன்புறும்போது அவளிற்கு நன்றிக்கடன் செய்யும் முகமாக சக்தி வழிபாடு இடம்பெறும் தன்மை தவிர்க்க முடியாத ஒன்றாகும்.



பாடல் எண் : 1

**மதிமலி புரிசை மாடக் கூடற்**
**பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற**
**கன்னம் பயில்பொழில் ஆல வாயின்**
**மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்**
**பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்**

**கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்**
**குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்**
**செருமா உகைக்கும் சேரலன் காண்க**
**பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்**
**தன்போல் என்பால் அன்பன் தன்பாற்**

**காண்பது கருதிப் போந்தனன்**
**மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.**

பொழிப்புரை:

ஓலையைத் ஹதிருமுகம்ஹ என்றல் அதனை விடுத்தோரது உயர்வு பற்றி. பாசுரம் – மிகுத்துரை பாட்டு. மதி–சந்திரன். மலிதல்–மகிழ்தல். முதனிலைத் தொழிற்பெயர். இது மகிழ்ந்து தவழ்தலாகிய தன் காரணம் தோற்றி நின்றது. இனி ஹமலி மதிஹ என மொழிமாற்றி ஹநிறைந்த திங்கள்ஹ என உரைப்பினும் ஆம். ஹஹமாடக் கூடல்ஹஹ என்பதற்குப் பொதுப் பொருள் கொள்ளாது. திருவிளையாடற் புராணத்தின் வழி ஹநான்மாடக் கூடல்ஹ எனப் பொருள் கொள்ளுதல் சிறப்பு. ஹகூடற் பதிமிசை நிலவு ஆலவாய்ஹ என இயைக்க. மிசைஇ ஏழனுருபு. கூடல்இ தலப்பெயர். ஆலவாய்இ அத்தலத்தில் உள்ள கோயிலின் பெயர். ஹஅருட்டுறைஇ பூங்கோயில்ஹ என்பன போலச் சில தலங்களில் கோயிலுக்குத் தனிப்பெயர் இருத்தல் அறியத் தக்கது. ஹபால் நிறச் சிறகு வரிச் சிறகுஹ எனத் தனித்தனி முடிக்க. பால் நிறம் – பாலினது நிறம் போலும் பால் அதன் நிறத்தை உணர்த்தலின் ஆகு பெயராய் திருமுகத்தில் எழுதப்பட்ட வரிவடிவங்களைக் குறித்தது. பருவம் – உரிய காலம்; கார் காலம். கொண்மூ – மேகம். படி – ஒப்பு. ஒருமையின் உரிமையின் – ஹஉதவுதல் தனக்குக்கடன் என ஒருப்பட்ட மனத்தினாலே கொண்ட உரிமையினால்ஹ. குரு – நிறம்; அழகு. மா மதி– பெரிய சந்திரன்; பூரணச் சந்திரன். ஹபுரை குடை; குலவிய குடைஹ எனத் தனித் தனி இயைக்க. புரை – ஒத்த. குலவிய – விளங்குகின்ற. ஹகுடைக் கீழ்ச் சேரலன்ஹ எனவும்இ ஹஉகைக்கும் சேரலன்ஹ எனவும் தனித்தனிச் சென்று இயையும். செரு மா – போர்க்கு ஏற்ற நடைகளைக் கற்ற குதிரை. உகைத்தல் – ஏறிச் செல்லுதல். பண்பால் – யாழ் இசைக்கும் தன்மை நிறைந்த நிலைமையினால். தன் போல் – தன்னை (அந்தச் சேரலனை)ப் போலவேஇ போந்தனன் –தன்பால் புகுந்தனன். மாண் பொருள் – மிகுந்த பொருள். வர விடுப்பது – மீண்டு வர விடை கொடுத்து அனுப்புதல்.

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வம தலைவர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சரின் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இப்தார் நிகழ்வு





சர்வமத தலை வர்கள் மற்றும் கிராமிய பொருளாதார இரா ஜாங்கஅமைச்சரின்பங்கு பற்றுதலுடன் வவுனியா மாவட்ட செயலகத்தில் இப்தார் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

புதன்கிழமைமாலை வவுனியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசஅதிபர்பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது, இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத குருமார் கலந்து கொண்டதுடன், கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பங்கு பெற்றுதலுடன் இடம்பெற்ற இந் நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05-100)

# தேசிய மத ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் நடைமுறை வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ், ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவின் கீழுள்ள தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தால் தேசிய மத ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கான நடைமுறை வேலைத்திட்டம்தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் மற்றுமொரு படியாக முஸ்லிம் மக்களின் ரமழான் நோன்பு காலத்தில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நோன்புப் பெருநாள் நிகழ்வு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் அமைச்சர் தலைமையில் அனைத்து மத தலைவர்களின் பங்களிப்புடன் மற்றும் அரசமைப்பு சீர்திருத்தம், நாவல ஜும்மா பள்ளிவாசலில் திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடின்றி இணைந்து பணியாற்றுதல், மற்றவர்களின் உணர்வுகளைஉணர்ந்துசெயல்படுதல், ஒருவருக்கு ஒருவர் உதவுதல் போன்றவற்றை ரமழான் நோன்பு காலத்தில் முஸ்லிம்கள் செய்கிறார்கள்.

வணக்கத்திற்குரிய கலாநிதி கலகம தம்மரன்சி தேரர், வணக்கத்திற்குரிய கலாநிதி பாபு சர்மா குருக்கள், கலாநிதி அல்ஹாஜ் ஹசன் மௌலானா, தந்தை கலாநிதி நிஷான் குரே ஆகியோர் விசேட உபதேசங்களை வழங்கினர்.

இந்நிகழ்வில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தலைவர் சரித் மரம்பே, நாவல பள்ளிவாசல் தலைவர் ஹனிபா ஹாஜியார் உட்பட பெருந்திரளான முஸ்லிம் பக்தர்கள் கலந்துகொண்டனர். (05)

## கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால்

# அம்பாறை லாகுகல நுகே வெள குளம் மக்கள் பாவனைக்காகக் கையளிப்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

வறட்சியான காலங்களில் விவசாயிகளின் பயிர்ச்செய் கைக்கு உதவும் வகையில் அம்பாறை லாகுகல நுகே வெள குளத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்தொண்டமான்மக்கள் பாவனைக்காககையளித்தார்.

8 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இக்குளம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விவசாய அமைச்சின் செயலாளர்முத்துபண்டா, கடற்தொழில் மற்றும்நீரியல் வளமீன்பிடி திணைக்கள பணிப்பாளர் சுதாகரன் உட்பட அரசஅதிகாரிகள்கலந்து கொண்டனர். (05)

# யாழ். நகரத்தில் நாளை ‘ஆரோக்கிய பவனி’

அனைத்துலக சுழியக் கழிவு தினமான நாளை யாழ் மாநகர பகுதியில்தூயநகரைஉருவாக்குவதை இலக்காகக் கொண்ட 'யாழ் ஆரோக்கிய பவனி'; தூய்மையாக்கல் பணியும், விழிப்புணர்வு செயற்பாடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் துணைத் தூதரகம், யாழ். மாநகரசபை, யாழ் பிரதேச செயலகம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ். பொலிஸாரின் நேரடிப் பங்களிப்பு மற்றும்ஆதரவுடன்சிகரம்நிறுவனத்தின் படலைவடமாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில், மேற்கொள்ளப்படவிருக்கிறது இந்தத் திட்டம். யாழ். நகரின் பிரதான வீதிகள் சிலவற்றின் ஊடாகவும், யாழ்ப்பாணத்தின் சுற்றுலா ஈர்ப்பு வலயமாக காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரம் முதல் பண்ணை சுற்றுவட்டம் வரையிலான பகுதியிலும் இதன் போது தூய்மைக்கால் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். ஆரியகுளம் சந்திப் பகுதியில் காலை 7 மணியளவில் ஆரம்பிக்கும் இந்தப் பணி, 3 வீதிகள் ஊடாக யாழ் பண்ணைப் பகுதி வரையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஓர் அணியினர் ஆரியகுளம் சந்தியிலிருந்துபருத்தித்துறைவீதியூடாக வைத்தியசாலை வீதியையடைந்து, அங்கிருந்து மகாத்மா காந்தி வீதியூடாக, மணிக்கூட்டுக்கோபுரம், பொதுநூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, யாழ் கோட்டை, பண்ணை நடைபாதை ஊடாக பண்ணைச் சுற்றுவட்டத்தை அடைவர்.

இரண்டாவது அணி, ஆரியகுளம் சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதியூடாக முட்டாசு கடைச் சந்தியை அடைந்து, கே.கே.எஸ். வீதியூடாக, தபால் கந்தோர் சந்தியைக் கடந்து சுற்றுவட்ட வீதியூடாக பண்ணைச்சுற்றுவட்டத்தைஅடையும்.

மூன்றாவது அணி, யாழ் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதான வீதி தண்ணீர் தாங்கி பகுதியிலிருந்து ஆரம்பித்து கடற்கரை வீதியூடாக பண்ணை சுற்றுவட்டத்தை வந்தடையும்.

பண்ணை சுற்றுவட்டப்பாதையை அனைத்துஅணிகளும்வந்தடைந்ததும், காலை 9.30 மணியளவில ரில்கோ உல்லாச விடுதியினரின் ஏற்பாட்டில் தாகசாந்தி வழங்கப்படுவதுடன், பண்ணைநடைபாதை, யாழ். கோட்டை உள்ளிட்ட சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் பகுதிகளை நிரந்தரமாக தூய்மையாகப்பேணும்வழிவகைகள் குறித்த கலந்துரையாடலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வில், இந்தியத் துணைத் தூதுவர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ் மாநகர ஆணையாளர், மாநகரசபையின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் யாழ் வணிகர் கழக பிரதிநிதிகள், உல்லாசவிடுதிகளின்உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கம்பஹா 5 நகர திட்டங்கள் ‘மே’க்குள் வர்த்தமானியில்



கம்பஹா மாவட்டத்தில் உள்ள 05 நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை அடுத்த மே மாதத்திற்குள் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்டான, கம்பஹா, வத்தளை, ஜா- எல மற்றும் மஹர ஆகிய பிரதேசங்களின்அபிவிருத்தித்திட்டங்கள் வர்த்தமானிமூலம்வெளியிடப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களாகும்.

கம்பஹா மாவட்டத்தின் நகர அபிவிருத்திதொடர்பில்நகரஅபிவிருத்தி மற்றும்வீடமைப்புஅமைச்சர்பிரசன்ன ரணதுங்கதலைமையில்புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கட்டான, கம்பஹா, வத்தளை, ஜா-எல மற்றும் மஹர ஆகிய நகரங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் இறுதி கட்டத்தில்உள்ளதாகதெரியவந்துள்ளது. உலகலாவிய விமான நிலையமாக கட்டான நகரம் உருவாக்கப்பட்டு வருகிறது. வத்தளை மேற்கு பிராந்தியத்தில் வளமான பசுமை விநியோக ஊக்குவிப்பு மற்றும் கொள்கலன் நகரமாகவும் ஜா-எல பசுமை முதலீட்டு நகரமாகவும் அபிவிருத்தி செய்யப்படும். மஹர கொழும்பு பிரதேசத்தில் பசுமையான நகர பாரம்பரியமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. கம்பஹா நகரம் வளர்ந்து வரும் பசுமை பெருநகரமாகவும் அபிவிருத்தி செய்யப்படும். மினுவாங்கொடை நகர அபிவிருத்தித் திட்டம் அடுத்த வருடத்திற்குள் அறிவிக்கப்படும். மினுவாங்கொடை நகர அபிவிருத்தி திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதனை அடுத்த வருட ஆரம்பத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கினார்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நகர அபிவிருத்திப் பிரதேசமாக அறிவிக்கப்படும் எந்தவொரு பிரதேசத்திற்கும் நகர அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்தக் கடமைப்பட்டுள்ளது. அதாவது 1978 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் மூலமாகும்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கைகட்டுப்படுத்துவதற்கு நிலையான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார். மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கும் வகையில் நீர்ப்பாசன திணைக்களம், காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் மாவட்ட செயலகம் தொடர்பான கூட்டு வேலைத்திட்டம்ஒன்றைதயாரிக்கவும் அமைச்சர் கூறினார். குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் இந்தத் திட்டம் பல கட்டங்களாக ஏற்பாடு செய்யப்படும் என்றும், தாம் தலையிட்டுதேவையானஏற்பாடுகளை அரசிடமிருந்து வழங்குவதாகவும் அமைச்சர் கூறினார்.

அண்மையில், கம்பஹா மாவட்டத்தில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் விசேட செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியது. அதன்படி 07 திட்டங்கள்நடைமுறைப்படுத்தப்பட்டதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்யானந்த, நகர அபிவிருத்திஅதிகாரசபையின்தலைவர் நிமேஷ் ஹேரத், பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரான் பாலசூரிய, மினுவாங்கொடை பிரதேச சபை, மாநகர சபை செயலாளர்கள், அதிகாரிகள், கம்பஹா மாநகர சபை தலைவர் மற்றும் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் கலந்துகொண்டன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# கொளுத்தும் வெயிலிலும் கல்முனையில் தமிழர்கள் 4ஆவது நாளாகப் போராட்டம்

## எந்த அரசியல்வாதியும் வரவில்லை என மக்கள் விசனம்









(வி.ரி.சகாதேவராஜா)

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல்தங்களுக்குஇழைக்கப்படும் அநீதிக்கு நீதி கோரி கல்முனையில் நேற்று (வியாழக்கிழமை) நான்காவது நாளாகப் பொதுமக்கள் போராட்டம் தொடர்கிறது.

பெருமளவில் பொதுமக்கள் அடையாள அமைதிகூடி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும்கடந்தமூன்றுதினங்களாகஎந்த ஒரு தமிழ் அரசியல் வாதியும் தங்களைப் பார்க்க வரவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாம் இதற்குத் தானா வாக்களிப்பது? எங்களுக்கு உரிமை பிரச்சினை ஏற்படுகின்றபோது இப்படி இவர்கள் பாராமுகமாக இருப்பது வேதனையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகிறது என்று மக்கள் மேலும் தெரிவித்தனர்.

அரச சேவையை பெறும் தங்களின் அடிப்படை உரிமையை பறிக்கும் இனவாத அதிகார அத்துமீறலுக்கு அரசு இடமளிக்கக்கூடாது இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் கல்முனை தெற்கு பிரதேசசெயலாளருக்கும் இனவாத அரசியல் வாதிகளுக்கும் தங்கள் கண்டனங்களை மக்கள் தெரிவித்து வருகின்றனர்.

கல்முனை வடக்கு பிரதேச தமிழ் மக்கள் அரச சேவைகளைப் பெறும் அடிப்படை உரிமைகள் தொடர்ச்சியாக திட்டமிடப்பட்டு மாற்றின அரசியல்வாதிகளால் பறிக்கப்பட்டு வருகின்றமை நாடறிந்த விடயம்

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் 30 வருடங்களாகத் தடுக்கப்பட்டு வருவதுடன் அண்மைக்காலமாக இருக்கும் அதிகாரங்களும் பறிக்கப்பட்டும் வருகின்றன.

பறிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கும் இயங்கிக் கொண்டிருக்கின்ற கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அரச அதிகாரங்களை பெற்று மக்களுக்கான அரசசேவையைபெறுவதற்குமுடியாமல்கடந்த 30 வருடங்களாகத் தவித்துக்கொண்டிருக்கும் இப் பிரதேச மக்கள் அமைதிப்போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். நான்காவது நாளாகவும் போராட்டம் தொடர்கிறது. பெருமளவான பொது மக்கள் பங்குபற்றினர்.

அரசியல்வாதிகளே அரச அதிகாரிகளே அமைச்சின் செயலாளரே உங்கள் பதில் என்ன?

ஆண்களும் பெண்களுமாக பிரதேச செயலத்தின் முன்னால்அமர்ந்துஅமைதியான முறையில் முன்னெடுத்து வருகிறார்கள்.(05)

# இஸ்லாத்தை அவமதித்துப் பேசிய குற்றச்சாட்டில் ஞானசாரருக்கு தண்டனை விதிப்புக்கு பாராட்டு




(பாறுக் ஷிஹான்)

ஞானசார தேரருக்கு மத நிந்தனைக்காக 4 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டதன் மூலம் நாட்டின் நீதித்துறை பாராட்டும்படியாக உள்ளது என புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது பற்றி புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் முஸம்மில் அபூசாலி தெரிவித்திருப்பவை வருமாறு -

முன்னாள் ஜனாதிபதி மைத்திரி காலத்திலும் ஞானசார தேரர் சிறைக்கு அனுப்பப்பட்டார். ஆனாலும் அவர் ஜனாதிபதி மைத்திரியால் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அது போன்று தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செயற்படமாட்டார் என்று நம்புகிறோம்.

ஞானசார தேரருக்கான தீர்ப்பு மதங்களை மோசமாக நிந்தனை செய்யும் சகலருக்கும் படிப்பினையாகும்.

இதனை ஒரு படிப்பினையாகக் கொண்டு மதங்களுக்கிடையில் அன்பையும், சகிப்புத்தன்மையையும் உண்டாக்க சகல மதத் தலைவர்களும் முன் வருவதுடன் அத்தகைய செயற்திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும் என புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கேட்டுக்கொள்கிறது. (05)

# பாராட்டு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் இயங்கி வரும் அன்நூர் கல்வி நிலையத்தில் அல்-குர்ஆன் மனனமிடல் வகுப்பில் இணைந்து குறுகிய காலத்திற்குள் குர்ஆனின் சில பகுதிகளை மனனம் செய்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்றது.

மருதமுனைஜம்இய்யத்துல்உலமா சபை தலைவர் அஷ்-ஷெய்க் எப்.எம். அஹமது அன்ஸார் மௌலானாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அன்நூர் கல்வி நிலையத்தில் இணைந்து அல்குர்ஆன் மனனம் செய்த 11 மாணவர்கள் நினைவுச் சின்னங்கள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்வில் பள்ளிவாசலில் பேஸ் இமாம் அஷ்-ஷெய்க் பைசல் கியாஸ் (பலாஹி) , அன்நூர் கல்வி







நிலையத்தின் ஆலிம்களான அல் ஹாபிழ்எம்.எச்.எம்.றாயிஸ்(ஷர்க்கி)அல் ஆலிம் எம் .ஐ நுஸ்கி (தாபிதி), அல் ஹாபிழ் எம்.ஏ.எம் உஸ்மான் (நூரி) ஆகியோர் உட்பட பள்ளிவாசல் நிர்வாகத்தினர், உலமாக்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (05)

# திருகோணமலை மீடியா போரத்தின் ஊடக அடையாள அட்டை வழங்கல்

(எச்.எம். ஹலால்தீன்)

திருகோணாமலை மீடியா போரத்தால் ஊடகவியலாளர்களுக்கான ஊடக அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு மீடியா போரத்தின் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

திருமலை மீடியா போரத்தின் தலைவர் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிதியாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி, பொது ஜன பெரமுனவின் மூதூர் தொகுதி இணைப்பாளர் எம். ஐ.சதாத், தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நகர சபை வேட்பாளர் எஸ்.எச். நளீம், எம் கடமை நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் இராசமாணிக்கம் ஜீவேந்திரன், இனிய மீனவர் சங்கங்களின் சமையலர் தலைவர் ஏ. ரிஜால் பாய்ஸ், திருகோணமலை மீடியா போரத்தின் செயலாளர் எஸ்.எம்.நளீஜ் மீடியாபுரத்தின்



உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தமிழ் சிங்கள முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்தனர்.

இதன் போது 28 ஊடகவியலாளர்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்கி வைக்கப்பட்டது. (05)

# ஆஸ்திரேலியா இலங்கை மாணவர் கல்வி நிதிய ஆதரவில் மாணவர்களுக்கு உதவி



ஆஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களுக்கும் மேலாக இயங்கிவரும் தன்னார்வத்தொண்டுநிறுவனமானஇலங்கை மாணவர்கல்விநிதியத்தின்அனுசரணையில் அண்மையில்வடமாகாணத்தில்யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் வறுமைக்கோட்டின்கீழ்வதியும்மாணவர்களின் கல்வி

வளர்ச்சிக்கு உதவும் வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான முதல் மூன்று மாத கால நிதியுதவி வழங்கப்பட்டது.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் யாழ் - முல்லை, கிளிநொச்சி மாணவர்ள தொடர்பாளர் அமைப்பான சிறுவர் அபிவிருத்தி நிலைய பணியாளர்கள் இந்நிகழ்ச்சியை ஒழுங்கமைத்திருந்தனர்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் திட்ட அமுலாக்கத்துடனும் ஆஸ்திரேலிய இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதிப்பங்களிப்புடனும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாணவர்களின் கல்விக்கான முதலாம் காலாண்டு

கொடுப்பனவுஇம்முறைஒருமாணவருக்கு மாதாந்தம் தலா நான்காயிரம் ரூபா வீதம் பன்னிரண்டாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இலங்கையில் தோன்றியிருக்கும் பொருளாதார நெருக்கடியை கவனத்தில்கொண்டு, 2024 ஆம் ஆண்டு முதல் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இம்மாணவர்கள் மாதாந்தம் மூவாயிரம் ரூபாவை பெற்று வந்தனர். ஆஸ்திரேலியாவில் வதியும் தமிழ் அன்பர்களின் நிதிப்பங்களிப்புடன் மூன்று தசாப்தகாலத்திற்கும் மேலாக இயங்கி வரும் இலங்கை மாணவர் கல்வி நிதியம், கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் யாழ். சிறுவர் அபிவிருத்திநிலையத்துடன்தொடர்பாடல்களை

மேற்கொண்டு, போரிலும் வறுமையிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களை வடக்கில் தெரிவுசெய்து இந்த நிதிப்பங்களிப்பை வழங்கி வருகிறது.

யாழ். சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்திற்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்திற்குமானநட்புறவுபலவருடங்களுக்கும் மேல் தொடர்ந்து செல்கின்றது.

அதற்கான காரணம் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாம் கைகொடுத்து உதவவேண்டும் என்ற எண்ணத்துடன் இரண்டுஅமைப்புகளும்செயற்பட்டுவருவதால் இவ் உறவுநீடித்துக்கொண்டுசெல்வதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. - என்று இந்நிகழ்வில் உரையாற்றிய பணியாளர்கள் நிதியுதவியை பெறும் மாணவர்களின்

தாய்மார் மற்றும் பாதுகாவலர்கள் முன்னிலையில் தெரிவித்தனர்.

2024 ஆண்டில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கி பல மாணவர்கள் கல்விக்கான



கொடுப்பனவை பெற்றுக்கொண்டனர். முதலாம் காலாண்டுக் கொடுப்பனவுகள் யாழ் மாவட்டத்தில் அந்தந்த பிரதேச

செயலக பிரிவுகளில் உதவி பெற்று வரும் மாணவர்களுக்கு சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் பணியாளர்களின் ஒழுங்கமைப்பில் பிரதேசசெயலகங்களில் வழங்கப்பட்டன.



இந்நிகழ்வுகளில்பிரதேசசெயலகங்களின் உதவிப் பிரதேச செயலர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள்முதலானஅரசஅதிகாரிகள் கலந்துகொண்டனர்.

நல்லூர் , சாவகச்சேரி , யாழ்ப்பாணம் , சங்கானை , தெல்லிப்பழை , வேலணை,

உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய்,

மருதங்கேணி,காரைநகர்,ஊர்காவற்றுறை முதலான பிரதேசங்களைச்சேர்ந்த மாணவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு

முதலான பிரதேசங்களிலும் , கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச செயலக பிரிவிலும் நிதிக்கொடுப்பனவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உதவிப்பிரதேச செயலர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் முரளிதரன், மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள்,

மகளிர்அபிவிருத்திஉத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

# சுவாமி விபுலாநந்தர் சிலை சிட்னியில் இன்று திறப்பு

தமிழரின் இசை, நடனம், நாடகம் தொடர்பான பல்வேறு நுட்பங்கள் குறித்த விவரங்களை உள்ளடக்கிய தமிழ்க் காப்பிய நூல் சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரை தமிழ் இசை நுணுக்கங்கள் குறித்த சில விளக்கங்களைத் தந்தாலும் அவ்விசை குறித்து முழுமையாக அறிந்துகொள்வதற்கு இவை போதுமானதாக அமையவில்லை.

சிலப்பதிகாரத்தை நன்கு கற்றிருந்த விபுலாநந்தர் அந்நூலின் சொல்லப்பட்டிருந்த இசை நுணுக்கங்கள் குறித்தும், பல்வேறு தமிழ் இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் பின்னர் வழக்கற்றுப் போய்விட்ட யாழ் என்னும் இசைக்கருவி குறித்தும் அறிய ஆர்வம் கொண்டார்.

விபுலாநந்தர்கணிதம்,இயற்பியல்ஆகியவற்றிலும் விற்பன்னராக இருந்ததால், இந்த ஆய்வுக்கு அவை உதவியாக அமைந்தன.

பழந்தமிழரின் இசை நுட்பங்கள்:

பழந்தமிழரின் இசை நுட்பங்கள், யாழ் ஆகியன பற்றி ஆராய்ச்சி முறையாக விவரிக்கும் ஒரு முதல் நூல் யாழ் நூலாகும்.

பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளாகிய வில் யாழ், பேரி யாழ், மகர யாழ், செங்கோட்டி யாழ், சீறி யாழ், சகோட யாழ் என்பன பற்றி யாழ் நூல் கூறுகின்றது.

இந்நூலை இயற்றியவர் ஈழத்தின் கிழக்கில் அவதரித்த சுவாமி விபுலாநந்தர் ஆவார். சுவாமி விபுலாநந்தரின் உருவச்சிலை சிட்னியில் திறக்கப்படுகிறது.

மூன்று பதிப்பு கண்ட யாழ்நூல் :

யாழ் நூல் இதுவரை மூன்று பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. முதற் பதிப்பு 1947 இல் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தால், கரந்தை கூட்டுறவுப் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதன் பின்னர் 1974 இல் 27 ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது பதிப்பையும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினரே வெளியிட்டனர்.

பல அமைப்புக்களும், தனியாரும் வழங்கிய நிதியுதவி இதற்குப் பயன்படுத்தப்பட்டது. இந்த இரண்டாம் பதிப்பில் க. வெள்ளைவாரணர் தமிழில் வழங்கிய முன்னுரை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்புப் பல்கலைக்கழக இதழில் வெளியான விபுலாநந்தரின் 'ஆயிரம் நரம்பு யாழ்' என்னும் ஆங்கிலக் கட்டுரையும் இரண்டாம் பதிப்பில் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டது.

அதன்பின்னர், சில புலம்பெயர்ந்து வாழும் ஆர்வலர்களினதும், பிறரதும் துணையுடன் திருநெல்வேலி யாதுமாகி பதிப்பகத்தின் சார்பில் யாழ் நூலின் மூன்றாம் பதிப்பு 2003 இல் வெளியானது. இப்பதிப்பில் நா. மம்மது அவர்களின் கருத்துரை புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர்:

விபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்குத் தலைவராக இருந்த காலத்தில், கருநாடக இசையின் அமைப்பு, நுணுக்கங்கள் ஆகியவை பற்றி அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

1936 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் இடம்பெற்ற இவரது பேச்சொன்றில், பழந்தமிழருடைய யாழ்கள் பற்றி விளக்கியதுடன் அவற்றின் அமைப்பையும் படங்கள் மூலம் விளக்கினார். இவரது ஆய்வுகளில் ஆர்வம் கொண்ட அறிஞர்கள் பலரும் இவரது ஆய்வுகளை நூலாக வெளியிடுமாறு ஊக்கம் கொடுத்தனர். எனினும், வெள;வேறு காலகட்டங்களில் இவரது பணிகள் காரணமாக இந்த ஆய்வு தடைப்பட்டிருந்தது.

இந்தியாவில் இமயமலைச் சாரலில் பிரபுத்த பாரதம் என்னும் ஆங்கில நூலுக்கு ஆசிரியராக இருந்தபோதும், பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய போதும் இந்த ஆய்வை நிறைவு செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

ஆய்வுக் காலத்தில், கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய தமிழ்ப் பொழிலிலும், மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டு வந்த செந்தமிழ் என்னும் இதழிலும் இவ்வாய்வுடன் தொடர்புள்ள பல கட்டுரைகள் வெளிவந்தன.

அத்துடன் திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகிய இடங்களில் உள்ள வானொலி நிலையங்களில் இது தொடர்பான விபுலானந்தரின் பேச்சுக்கள் இடம்பெற்றன. மேற்குறித்த கட்டுரைகளிலும், பேச்சுக்களிலும்இருந்தவிடயங்களும்கருத்துக்களும் யாழ் நூலில் இடம்பெற்றுள்ளன. (05)

# ஆஸ்திரேலிய உயர் ஆணையர் நேற்று மன்னாருக்கு வருகை

## பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வு



இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் சில்வெஸ்டர் வோர்திங்டன் வடக்கு விஜயத்தின் ஒரு பகுதியாக நேற்று (வியாழக்கிழமை) காலை மன்னாருக்கான விஜயம் மேற்கொண்டு வருகை தந்தார்.

இந்தநிலையில்மனிதஉரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமைகள் செயற் பாட்டாளர்களை ஒன்றிணைத்து இடம்பெற்ற விசேட சந்திப்பில் கலந்து கொண்டார்.

மேற்படி சந்திப்பில் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜ் உள்ளடங்களாக மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலின் போது ஆஸ்திரேலியாவின்நிதி உதவியுடன்திட்டங்கள் அமுல் படுத்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்ட நிலையில் மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் அலுவலகத்தில் பயனாளிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் உடன் அவர்களின் எண்ணக் கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

மேலும் மன்னாரில் பால்நிலை அடிப்படையிலான வன் முறைகளும் பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வு







அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நேற்று (வியாழக்கிழமை) பாடசாலையின் மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பகியது.





மாணவர்களின் அணிநடை நிகழ்வு, அஞ்சல் ஓட்டம், 100 மீற்றர் ஓட்டம், மாணவர்களின் இடைவேளை நிகழ்ச்சி என்பன இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து வீர வீராங்கனைகளுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் கு.பாலமுருகன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில் கல்வி விளையாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார சிரேஸ்ட உதவிச் செயலாளர் ந.திருலிங்கநாதன் பிரதம விருந்தினராகவும், கலாநிதி ஈ.எஸ்.பி.நாகரட்ணம் சிறப்பு விருந்தினராகவும், பா.பாலச்சந்திரன் (சிற்பாசாரி) அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்ததுடன், இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், அயற்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(05)



# குளிரூட்டி லொறியில் பீடி இலை கடல் அட்டை கண்டக்குழி தங்கெல பகுதியில் மாட்டியது

(சியாஜ்)

கற்பிட்டி கண்டக்குழி, தங்கெல பகுதியில் வைத்து பெருந்தொகையான பீடி இலைகள் மற்றும் கடல் அட்டைகளை நேற்று(வியாழக்கிழமை) கற்பிட்டி பொலிஸாரின்சுற்றிவளைப்பில்கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டக்குழி கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் 61 உறைகளும்மற்றும்கடல்அட்டைகள்06உறைகளும் கண்டக்குழி கடற்கரையிலிருந்து வெளி ஊருக்கு கொண்டு செல்லும் வழியில் கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.ஏ.டப்யூ.எஸ். எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர்களான உபுல், பண்டார, வண்ணிநாயக்க ஆகியோரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது இக்கடத்தல் சம்பவத்துக்கு பயண்யடுத்தப்பட்ட குளிருட்டிலொறியும்வாகனத்தின் சாரதி புத்தளத்தைச் சேர்ந்தவரும் மற்றைய கற்பிட்டி ஜனசவிபுரயைச் சேர்ந்தவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கைப்பற்றப்பற்ற பீடி இலைகள் மற்றும் கடல் அட்டைகளின் பெறுமதி சுமார் 3.5 கோடி எனவும் மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.(05)

# மணல் கடத்தல் திருட்டு பொலிஸில் மாட்டியது



அனுமதி இன்றி அனுமதிக்கப்படாத கேருடாவில் பகுதியில்மணல்விற்பனை நிலையம்ஒன்றைநடாத்தி வந்தா சந்தேக இருவரும் சந்தேக நபரிடமிருந்து 27 கியூப் மணல்களும் மணல் ஏற்றுவதற்காக பயன்படுத்திய இயந்திரம் ஒன்றும் டிப்பர் வாகனம் ஒன்றும் ஒட்டி சுட்டான் பொலஜஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றிய தடயப் பொருட்கள் அனைத்தையும்



நேற்று (வியாழக்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்த்தில் முற்படுத்தப்பட்டதாக ஒட்டிசுட்டா பொலீஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.(05-113)

# மருதமுனை படுகொலை சந்தேகநபரான தந்தைக்கு 14 நாள்கள் விளக்க மறியல்



(பாறுக் ஷிஹான்)

மருதமுனை இரட்டைபடுகொலை சந்தேகநபரானதந்தையை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பாக்கியதுல் சாலியா வீதியில் உள்ள வீட்டில் படுகொலை செய்யப்பட்ட இரு பிள்ளைகளின் வழக்கு தொடர்பில் நேற்று (வியாழக்கிழமை) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் பெரிய நீலாவணை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அந்தப் பிள்ளைகளின் தந்தை மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதேமேற்கண்டவாறுஉத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப் பங்கள் ஆராயப்பட்டு 63 வயதுடைய குறித்த சம்பவத்தில் மரணமடைந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முஹம்மது மிர்சா முகமது கலீல் என்பவரை14நாள்கள்விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.03.2024இல் வெளியிடப்பெற்றது